சிவமயம்

குமரகுருபரன்

கு. 3125

மலர் 25] 1974-ஆம் ஆடி மீ 1-ம்௳ (17-7-74) [இ

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5-0

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,

சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.

ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B A.

ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]

B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை-86

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.

அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்

உள்ளுறை

		பக்கம்
1.	திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் அருளிய திருவுந்தியார்-உரைவிளக்கம் ...	337
2.	அலங்கார நாயகன் ...	340
3.	நாய் தந்த முத்தம் ...	344
4.	திருமுறையும் நம்பியாண்டார் நம்பியும் ...	346
5.	கடவுள் இருக்கிறர் ...	350
6.	எந்தாய்! இன்றும் ஆளாயோ? (கவிதை) ...	356
7.	அருள்மொழி அமுது ...	357
8.	வானோர் அறியா வழி	362
9.	முன்னறி தெய்வம் ...	365
10.	ஈனமிலாப் புகழ் அண்ணல் ...	369
11,	தாதை போல் தனயன்	372
12.	உடம்பிடித் தெய்வம் ...	375
13.	Panguni Barani Pooja to Sri Swaminatha Swami at Ramakrishnapuram-New Delhi Capital Rs. 1,500/-	379
14.	மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை	55 to 58

T-UN-445

உ

திருச்செந்திலாண்டவன் துணை

பன்னிருதிருமுறை பதிப்பு நிதி வெளியீடு:

பெரிய புராணம்

மூலம் மட்டும் (புதிய பதிப்பு)

ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் 286-ம் ஆண்டு

மாகேசுவரபூசை வெளியீடு

750 பக்கங்கள் கொண்டது: வெள்ளைத்தாள்

விலை ரூ. 6-75

20 பிரதிகளுக்கு குறையாமல் வாங்குவோர்க்கு
20% கழிவு உண்டு.

பாக்கிங் செலவு தபால், ரயில் கட்டணம் வேறு

கிடைக்குமிடம்:-

K. சுப்பிரமணியன், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம், 628601 (திருநெல்வேலி ஜில்லா)

தியாகராஜ விலாசம், 53. பிள்ளையார் கோயில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை திருவல்லிக்கேணி
சென்னை-5

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 25	ஆனந்த ௵ ஆடி இதழ் 1௳ [17-7-74]	இதழ் 7

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனுர்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற.

சுழுமுனை நாடியின் முனையில், என்றும் நிறைந்திருக்கின்ற பவிந்து என்னும் சிலம்பிலிருந்து எழும், பரநாதமாகிய ஓசையினது, மெய்யடியார் பிறவித் துன்பத்தை நீக்கும் ஒலியின் வழியே சென்று, அந்த ஒலி எதிர்ப்படுமிடத்தில் சமாதி கூடிப், பரமானந்தத் திருக்கூத்தைச் செய்யும் மகா ருத்திர தாண்டவேசுவரரைத் தெரிசித்துத் தொழுவாயாக!

உயிர்களுக்குக் கருவி கரணங்களாகியவற்றின் கூட்டினுல் வந்த வெற்ருரவாரம், துன்பத்தைத் தருவது அதனில் நீங்கி இன்பப்பேறு பெறுவதற்குச் சிவபரம் பொருளின் திருவருள் துணையாதல் வேண்டும். அரசகுமாரன் அவனுக்குமறுதலையாக இருந்து இடையூறு செய்த மாற்ருனை ஓட்டி, வெற்றியுடன் தனது நகரத்தைச் சென்று சேரும் பொழுது, அவனுக்குரிய வாத்தியங்கள் ஒலித்து அவனை எதிர்கொள்வது போலப், பன்னெடுங் காலமாக உடனிருந்து இடையூறு செய்துவந்த பகைமை, திருவருளால் நீங்குகிற பொழுது, எப்பொழுதும் பரமானந்தநிருத்தம் பண்ணியருளுகின்ற சிவபெருமனது திருவடிகளிற் சிலம்பும், ஓசையுமாக விளங்குகின்ற பரநாத, பரவிந்து ஆகிய இரண்டும், ஆரவாரித்துப் பிறவித்துயர் நீங்கும்படி செய்யும், தற்போதம் களைந்து தொழுகின்ற மெய்யடியார்கள், மயக்கம் விகற்பமாகிய தீய பட்டையிற் சென்று தட்டுப்படாமல், நல்லடிக்குச் செல்லும் இந்தச் செவ்வழியில் செல்லுவார்கள்.

பிரமதண்டம் என்னும் முதுசெலும்புக் கூட்டினுள் இடகலை பிங்கலைகளாகிய நரம்புத் தொகுதிகளின் இடையில் ஊடுருவிக் கொண்டுமேலே செல்லுவது சுழுமுனைத் துவாரம் மூலதாரமென்றும் அதன் அடியில் ஒடுங்கி அடங்கிக் கிடப்பது குண்டலினி சத்தி. அந்தச் சக்தியைச் சிவயோகத் தாற் கிளப்ப, உடனே இடகலை பிங்கலைகள் அடங்கிச் சுழுமுனை திறக்கும். அந்த வேளையில் அதில் பிராணவாயு சென்று மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும் கடந்து, சுழுமுனை முனையை அடையும். அந்த முனையே, எல்லாத் தத்துவங்களுமபாழான இடமாதலால் அங்கே உண்டாகும்

ஆன்ம உணர்ச்சி, விஷயப் பற்றின்றி இருக்கும். அப்போது அங்கு தோன்றும் தாண்டவ மூர்த்தியினது சிலம்பொலியே பரநாதம் என்று சொல்லப் பெறுவது. அந்த அருள்ஒலி சிவராஜ யோகிகளாகிய மேலோர்களுக்கே கிடைக்க கூடியது. சேரமான் பெருமான் நாயனாரின் நித்திய பூசையில் அவர் நாளும் பெற்றுவந்து இன்புற்று வந்தது இந்த அருளோசை யேயாகும். "பூசைக்கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலியளித்தார்" என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. சிலம்பொலியைக் கேட்பிக்க வல்லதாகிய சிவராஜ யோகமும், சிவஞானத்திற்கு நேர் வாயிலாக இருப்பதல்லாமல் முத்தியை நேராக வழங்குவதில்லை சிவராஜயோகத்தைச் செய்து முடித்தவர்க்கு ஞானம் எளிதில் கைகூட, ஞானத்தினாலேயே அவர் முத்தியைப் பெறுவர். "ஞானத்தால் வீடென்றே நான்மறைகளும் புராணங்களும் நல்ல ஆகமங்களும் சொல்லுகின்றன" ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண் சுடர், ஞானவிளக்கினை யேற்றி நன்புலத்து, ஏனை வழிதிறந்து ஏத்துவார் தமக்கிடர், ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே. என்ற ஆளுடையார் பிள்ளையார் திருவாக்கு இங்கே நினைவு கூர்தற்குரியது "யோகமார்க்கத்தால் கதிகூடாது, ஞான மார்க்கமே கதியைக் கூட்டுவது" என்பதைத் தாயுமான சுவாமிகள் "சொல்லரிய அமுதுண்டும் அற்பவுடல் கற்பங்கள் தோறும் நிலை நிற்க வீறுசித்தி செய்தும் ஞானமலது கதி கூடுமோ" என்று அருளுவதால் அறியலாம்.

சிவபரம் பொருளின் திருக்கூத்து இருவகைப்படநிகழ்வது ஒன்று பஞ்சகிருத்தியத் தாண்டவம் மற்றொன்று பரமானந்ததாண்டவம். முன்னையது பெத்தான்மாக்களின்பொருட்டாகவும் பின்னையது முத்தான்மாக்களின் பொருட்டாகவும் நிகழும். நமது நெஞ்சினுள் இடையறாது நிகழும் உசுவாசம், நிசுவாசமென்னும் மூச்சோட்டத்தை நிகழச் செய்வதும் திருவருட்கூத்தென்று சொல்லப் பெறும். "என்னுள்ளே உயிர்ப்பாய்ப்புறம் போந்து நின்று என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே எனவும்" உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும் கள்ளத்தே நிற்றி அம்மா எங்ஙனம் காணுமாறே எனவும் அப்பர் சுவாமிகள் அருளுகிறார்கள்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அலங்கார நாயகன்

திரு ஸ்ரீ பார்வதி அம்மாள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

2, சர்க்கரை மொக்கிய கை

ஒருவர் ஒரு காரியத்தைச் செய்வதற்குப் பல வழிகளில் முயன்று இறுதியில் எந்த வழியாக வெற்றி பெற்றுரோ, அந்த வழியைப் பின்னுல் வருகின்றவர்களுக்கும் சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதனே மரபு என்று வழங்குவார்கள் அந்த மரபுப்படி ஒரு நூலைத்தொடங்க வேண்டுமானுல் விநாயகரை வணங்குவது மரபு திருவண்ணுமலை ஆலயத்தின் கோபுரம் கிழக்கு நோக்கி இருக்கிறது. அந்த கோபுரத்தின் வழியே உள் வாயிலில் ஒரு பக்கம் விநாயகரும் மற்றொரு பக்கம், முருகனும் எழுந்தருளியுள்ளனர். விநாயகருக்கு அவர் தனியாக துதி சொல்லவில்லை உள்வாயிலில் உள்ள இளைய களிற்றுக்கு மூத்த களிற்றைக் கண்டுகொண்டேன்; என முருகனுக்கும், விநாயகருக்கும் ஒரேபாட்டினில் வணக்கம் தெரிவிக்கிருர்.

> ''அடலரு ணைததிருக் கோபுரத்தே அந்தவாயிலுக்கு
> வடவரு கிறசென்று கண்டுகொண்டேன்''

அண்ணுவாகிய களிறு எத்தகையது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இறைவனுக்கும் உயிருக்கும் அநாதி காலந்தொட்டு இருக்கின்ற சம்பந்தத்தை; அதாவது ஆண்டானடிமைத் தொடர்பை மறவாது இடையருது நினைந்து நினைந்து, காதல் கொண்டு உள்ளம் கசிந்துருகி அதனுல் தன்முனைப்புச் சிறிதுமின்றிச் சிவத்துள் அடங்கிநிற்றலை இத்திருப்பாட்டில் கும்பிடுதலாகக் கூறப்பெற்றுள்ளது.

(தொடரும்)

வருவார் தலையில்
தடபடெனப்படு குட்டுடன் சர்க்கரை
மொக்கிய கை
கடதட கும்பக் களிறு.

அதோ விநாயகர் வீற்றிருக்கிறார். அந்தக் களிற்றுக்கு இளைய களிறாகிய முருகனை நான் கண்டு கொண்டேன் என்று கூறுகிறார். இங்கே நகரப் படலத்தைச் சுருக்கமாகக் கூறிக் கொண்டு பாட்டை ஆரம்பிக்கிறார்.

அடல் என்பதற்கு வீரம் என்ற பொருள் உண்டு, அருணைக்கு வீரம் ஏது? அடல் அருணை என்றால் அந்த ஊரில் வாழ்கின்றவர்கள் வீரம் மிக்கவர்கள் என்பது பொருள். வீரத்தில் சிறந்தவன் முருகன், தேவசேனாபதி என்று அவனுக்கு ஒரு பெயர் உண்டு. அமரர்கள் படைக்குத் தலைவன் அவன். வீரம் பொருந்திய அவன் எழுந்தருளி இருக்கும் இடம் திருவண்ணாமலை, அதுவும் வீரம்நிறைந்த இடம். அந்த ஊரில் பல ஞானப் பெரியார்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் தங்கள் பொறியினை வென்றவர்கள் ''புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம்'' என்று ஔவையார் சொல்கிறார்.

ஞான வீரர்கள் நடமாடிய ஊர், திருமகள் தாண்டவமாடும் இடம் திருவண்ணாமலை, அதற்கு அடையாளமாக விளங்கும் இத்திருக் கோபுரத்தைப் பாருங்கள் என நம்மை அழைத்துச் சென்று விநாயகக் கடவுளைப்பற்றிச் சொல்லுகிறார்.

விநாயகரைக் களிறு என்று சொன்னார், அந்தக் களிறு எத்தகையது? வருவார் தலையில் தடபடெனப் படுகுட்டுடன் சர்க்கரை மொக்கிய கடதட, கும்பக்களிறு என்ற மூன்று இலக்சணங்கள் கூறுகிறார். தடபடெனப் படு குட்டை ஏற்றுக் கொள்ளும் களிறு அது. சர்க்கரை மொக்கிய கையை உடைய களிறு அது. கடதட கும்பக்களிறு, முதல் இரண்டும் விநாயகர் செய்கின்ற காரியத்தைச் சொல்வது. குட்டைப் பெற்றுக் கொண்டு சர்க்கரையை ஏந்தியிருக்கிறார், இறைவன் சந்நிதானத்திற்குப் போகும் போது மக்கள் பணிவாகப்போக வேண்டும், நம்மிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை என்று

தலைநிமிர்ந்து நடக்கும் போது, தலையில் குட்டுவிழுகிறது. நாம் உயர்ந்தோம் என்று எண்ணித் தலை நிமிர்ந்து போகும் போது யாராவது நம் தலையில் குட்டி உட்காரவைத்து விடுகிறார்கள். நாமே தலை குனிந்துப் போய் விட்டால் நம்மைப் பிறர் குட்டவேண்டிய அவசியம் இராது.

''எல்லார்க்கும் நன்றும் பணிதல்'' எனத் திருவள்ளுவர் பேசுகிறார், இதனை நமக்கு விநாயகப்பெருமான் அறிவுறுத்துகிறார். ஆண்டவன் திருக்கோயிலுக்குப் போகும் போது தலை நிமிர்ந்துக் கொண்டு போகாதே, நான் வாயிலிலேயே உட்கார்ந்துக் கொண்டிருக்கிறேன். என் எதிரில் நின்று தலையில் குட்டிக் கொண்டுபோ, என்று அறிவுறுத்துகிறார். வருவார் தலையில் தடபடென படுகுட்டுடன் அவர் உட்கார்ந்திருக்கிறார். அவரைப் பார்க்கின்ற நாம் எல்லோரும் முதலில் குட்டிக் கொண்டு பணிவுடன் போக வேண்டும். நம்மை நாமே குட்டிக் கொள்வது, நம்மைநாமே சீர்திருத்திக் கொள்வதற்கு அடையாளம், தம்மைதாமே சோதித்துக் கொள்வது மகான்களுடைய குணம்.

''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்கிறார் வள்ளுவர். எம்பெருமானுடைய சந்நிதியிலே வணங்கி நின்றால் அவர்களுக்கு சர்க்கரை கிடைக்கும், அவர்கள் வாழ்க்கை சர்க்கரை போல் இனிக்கும் என்பதை அது குறிப்பிடுகிறது.

கடதட கும்பக்களிறு என விநாயகரைச் சொல்கிறார் அருணகிரிநாதர், கடம் என்பது மதம், தடம் என்பது அது பிறக்கின்ற சுவடு, கும்பம் என்பது தலை. மத்தகம், மதம் வழிந்தோடுகின்ற சுவட்டோடு கூடிய தலையைப் பெற்ற யானை என்று பொருள். உலகத்தில் நாம் பார்க்கின்ற யானைக்கு மதம் உண்டானால் அதுமற்ற பிராணிகளுக்கு தீங்கை அளிக்கும். ஆனால் விநாயகருக்கோ அருளாக அது வெளிப்படுகிறது.

அரனுக்கு மலையாகிய திருக்கோயிலின் வாயிலில் விநாயகராகிய களிறு இருக்கிறது. கருணையென்னும் மதம் பொழியது இருக்கிறது.

''உள்ளமெனும் கூடத்துள் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதியாகத்
தன்னரிய அன்பென்னும் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்போம்''

என்று பரஞ்சோதி முனிவர் அந்தக் கடதட கும்பக் களிற்றைப் பாடுகின்றார். அந்த யானை தன்னை அண்டிய பக்தர்களுடைய காரியங்களை எல்லாம் நிறைவேற்றி வைக்கின்ற கருணை உடையது. அவரைப் பணிவுடன் வணங்க வேண்டும். அப்படி வணங்கினால் இனிமையான பிரசாதம் கிடைக்கும். பசு போதத்தை அவருக்குக் கவளமாகக் கொடுத்து விட்டால் அவர் கருணை பொழிவார். விநாயகரை நேர்முகமாகச் சொல்லாமல் முருகனோடு சார்த்திச் சொன்னாலும் இப்பாட்டில் விநாயகருடைய பெருமையே சிறப்பாக நிற்கிறது. இச்செய்யுளே காப்பைப் போல் அமைந்திருக்கிறது.

''அடலரு ணைத்திருக் கோபுரத்
தேஅந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண்
டேன்வரு வார்தலையில்
தடபடெனப் படுகுட் டுடன்
சர்க்கரை மொக்கியக் கைக்
கடதட கும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே''

(தொடரும்)

தாய் தந்த முத்தம்

செல்வி. த. பத்மாவதி அவர்கள்
கீளக்கருவூலம்
பாபநாசம் தஞ்சாவூர் மாவட்டம்

நான் சமீபத்தில் திருச்செந்தூர் சென்று திருக்கோயி லில் வீற்றிருக்கும் ஆறுமுக நயினரை தரிசித்துக் கொண்டி ருந்தேன் கூட்டம் சற்று குறைந்த நேரம். ஆகையால் பூசிக் கும் அந்தணர் என்னிடம் "நன்ருகப்பாருங்கள் சுவாமியின் முகத்தில் மீன் கடித்த வடுக்கள் இருப்பதை" என்ருர், எனக்கு சுவாமியின் திருமுகத்தில் மீன் எப்போது ஏன் கடித் தது என்ற சந்தேகம். அர்ச்சகரிடமே கேட்டேன். அவர் கூறியதாவது.

17-ம் நூற்ருண்டில் டச்சுக்காரர்கள் ஆறுமுகநயினு ரைக் கடத்திக் கொண்டு படகிலேறி கடலில் போகும்போது திடீரென பெருமழையுடன் கூட பேய்க்காற்றும் வீசத் தொடங்கிற்று வெளிநாட்டாரால் தங்கள் பயணத்தைத் தொடர முடியவில்லை. அவர்கள் சிந்தையில் மின் பொறி தட் டியது ஒருக்கால் இந்த விக்கிரகம் தங்களுடன் இருப்பதால் தான் இந்த இடையூறு வந்ததோ எனக்கலங்கி திருவுருவைக் கடலிலே போட்டு விட்டார்கள். உடனே புயலும் மழையும் நின்றன. கொள்ளைக்காரர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

செந்திலாண்டவன் தன் பால் அன்பு மிகக்கொண்ட திரு வடமலையப்பப் பிள்ளையவர்களின் கனவில் தோன்றி தானி ருக்குமிடத்தைக் கூற பிள்ளையவர்கள் படகிலேறி கடலில் செல்லும்போது ஓர் இடத்தில் எலுமிச்சை மிதக்கும் அறி

குறியைக்கண்டு உணர்வு மிகுதியால் அவ்விடத்திலேயே கடலில் குதித்தார்கள் அடியார் இடைஞ்சல் களையும் அண்ணலின் அருளால் கடல்நீரும் வற்றியது. பிள்ளையவர்கள் அங்கே செந்திற்பதிபுக்கும் செவ்வேளைக் கண்டு தொழுது அவனுடனேயே படகில் ஏறவும் கடல் மீண்டும் தன்னிலை கொண்டது, அப்படி ஐயன் கடலாடிக் களித்த காலத்தே மீன்கள் கடித்ததால் ஏற்பட்ட தழும்புகள் தாம் இன்றும் அம்முத்துக்கு முதலான மூர்த்தியின் முகத்தை அழகு செய்கின்றன.

சுவையான வரலாறு ஆனல் எனக்கு அவை மீன் கடித்த வடுக்களாய்த் தெரியவில்லை. தாய் தன் மதலையைக் கொஞ்சும் போது கடித்துக்கடித்துக் கொஞ்சுவாளே அன்பின் முதிர்ச்சியால் அப்படித்தான் தெரிகின்றன. முழுமுதற் கடவுளாம் அச்செவ்வேளுக்கு ஒரு காலத்தில் சரவணப் பொய்கையில் அவ்வொளிப்பிழம்பு உருக்கொண்டு வளரும் போது கார்த்திகைப் பெண்கள் மீன் உருவில் இருந்தல்லவா பாலூட்டி வளர்த்தார்கள் இந்நிகழ்ச்சியை நம் கலி நீங்க கந்தர் கலி வெண்பா பாடியருளிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் "அறுமீன் முலையுண்டு அழுது விளையாடி நறுநீர் முடிக்கணிந்த நாதன்" என்பார். அப்போது தங்கள் செல்வனைப் பிரிந்த அத்தாய்மார்கள் (நீண்ட காலம் கடந்து) இப்போதுதான் (செந்தூர்க் கடலில்) பார்க்கிருர்கள் கொஞ்சாது விடுவார்களோ? அது தான் தங்கள் ஆசைதீர கடித்துக் கொஞ்சினர் போலும்! அன்னை தந்தஅன்பு முத்தத்தின் சின்னங்களேஅவை. மேலும் அழகுக் குழந்தைக்கு வைக்கும் திருஷ்டி பொட்டு போல் அழகனின் முகத்தில் அவை துலங்குகின்றன.

தந்தைதான் திருப்பூவணத்தில் நடராசர் திருக்கோலத்தில் ஒருத்தியின் அன்புக்கிள்ளலுக்கு ஆட்பட்டு குழைந்து அவளது நகக்குறியை தன் கன்னத்தில் சுமக்கிருனென்ருல் மகனுமா திருச்செந்தூர் கடலிலே அன்னையரின் அன்புக் கடிக்கு ஆளாக வேண்டும்? நல்ல பரம்பரை!

அன்புக்கு முன் அடையாக் கதவுடைய அலைவாய் அரசனின் அடிபணிவோமாக!

திருமுறையும் நம்பியாண்டார் நம்பியும்

திரு, பொ. திருஞானசம்பந்தம் அவர்கள்,
செஞ்சி

—★—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நம்பியாண்டார் நம்பி திருமுறைகளை வகுக்குங்கால் மூவர் பாடிய திருப்பதிகங்களையும் முன்போலவே ஏழுத் திருமுறைகளாக வகுத்தார் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. எனவே மூவர் பதிகங்களும் நம்பியின் காலத்திற்கு முன்பே ஏழு பகுதிகளாக தொகுக்கப்பட்டிருந்தன என்பது நன்கு பெறப்படும். ஞானசம்பந்தபிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை அவருடன் சென்ற அடியார்கள் எழுதியும் பாடியும் வந்தனரென்பது வரலாறு. மதுரையில் சமணரோடு வாது செய்யக் கருதிய ஆளுடைய பிள்ளையார் தாம்பாடிய திருப்பாடல் களெழுதப்பெற்ற திருமுறையேட்டிற் கயிறு சார்த்தி பார்த்து, எரியிலிட்டு வெற்றி பெறுதற்குரிய ''போகமார்த்த' என்ற திருப்பதிகத்தினைத் தெரிந்தெடுத்த செய்தியும், மதுரையிற் சமணரை வாதில் வென்ற பிள்ளையார் திருத்தெளிச்சேரியை அடைந்த நிலையில் புத்தர்கள் கூட்டங்கூடித் தம்தலைவன் புத்த நந்தியுடன் சேர்ந்து பிள்ளையாரது வரவைத் தடுத்தபொழுது ஞானசம்பந்த பிள்ளையார் பாடியருளும் தேவாரத் திருப்பதிகங்களை எழுதி வரும் இயல்புடைய அடியாரொருவர் 'புத்தர் சமண்கழுக்கையர்' எனத் தொடங்கும் பஞ்சாக்கரத் திருப்பாடலைப் பாடிப் புத்த நந்தியின்மேல் இடி விழச் செய்தமையும் இவ்வுண்மையினை வலியுறுத்துவனவாகும் இவ்வாறே திருநாவுக்கரசருடன் சென்ற அடியவர்கள் அவர்பாடியருளிய திருப்பதிகங்களை எழுதியிருத்தல் வேண்டும், இவ்விரு பெருமக்களும் இறைவன் திருவருளிற் கலந்தபின்னர்ச் சீகாழிப் பதியிற் பிறந்த கணநாத நாயனரால் ஆதரிக்கப்பெற்ற சிவனடியார்கள் அருளாசரியர்கள் பாடிய திருமுறைகளை எழுதியும் வாசித்துப் பொருள் கூறியும் போற்றிக் காவல் செய்துள்ளார்கள். இவ்வடியார்களால் எழுதி வாசிக்கப்பெற்ற திருமுறைகள் என்

பன கணநாத நாயனருக்கு முன்னிருந்த சம்பந்தரும் அப்பரும் அருளிச்செய்த தேவாரத் திருமுறைகளேயாதல் வேண்டும் இப்பெருமக்கள் பாடியருளிய திருப்பதிகங்களெல்லாவற்றையும் இவர்கட்கு பின்வந்த நம்பியாரூரராகிய சுந்தரர் நன்கு பயின்று இறைவன் திருமுன்னர்ப்பாடி அப்பெருமானது திருவருளை நிரம்பப் பெற்று மகிழ்ந்துள்ளார் இவ்வுண்மையை.

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்
கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லியேத்துகப்பானை.

எனவரும் சுந்தரர் வாய்மொழியால் இனிது புலனாதல் காண்க

மேற்காட்டிய குறிப்புகளால் தேவார ஆசிரியர் காலத்துப் பாடப் பெற்ற திருமுறைப் பகுதிகள் யாவும் அக்காலத்து ஒருசேரத் தொகுக்கப்பட்டு மக்களால் விரும்பிப் பயிலப் பெற்றன என்பது இனிது விளங்குதல் காணலாம். விஜயநந்தி விக்கிரமனாகிய நந்திவர்ம பல்லவ மன்னனது 17-ம் ஆட்சியாண்டில் கி. பி 750ல் திருவல்லம் திருக்கோயிலிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் "திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருபதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணிசெய்வோர்க்கும் நெல்லு நானூற்றுக் காடியும்" எனக்குறிக்கப் படுதலால் கி.பி எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே மூவருடைய தேவாரப் பதிகங்கள் திருக்கோயில்களிற் பாடப் பெற்று வந்தசெய்தி நன்கு புலனாகிறது. தேவார ஆசிரியர்கள் வாழ்ந்த காலத்தையொட்டியே அவர்களாற் பாடப் பெற்ற திருப்பதிகங்களைத் திருக்கோயில்களில் இசையுடன் பாடுதற்குரிய ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு வேண்டும்உணவு உடை முதலியவற்றிற்கென நிலமும் பொருளும் வழங்கும் வழக்கம் நாட்டில் நிலைபெற்றதென்பதற்கு மேற்காட்டிய நந்திவர்மன் காலத்துத் திருவல்லத்துக் கல்வெட்டே பொருந்தியசான்றாகும். தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சியை மீண்டும் நிலைபெறச் செய்த விசயாலயன் முதலாகவுள்ள எல்லாச் சோழ மன்னர்களும் பிற்கால பாண்டியர்களும் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களைக் கற்றுளியாக்கி அங்கு மூவர் திருவுருவங்களை யெழுந்தருளச்

செய்து நாள் வழிபாட்டிற்கும் திருவிழாச் சிறப்பிற்கும் திருக் கோயில்களில் நாடோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய் தற்கும் வேண்டும் நிவேதங்களை வழங்கியுள்ளார்கள்,

திருமுறையாசிரியர்களாகிய சம்பந்தர் முதல் சேரமான் பெருமாள் ஆகிய அருளாசிரியர்களையுள்ளிட்ட அறுபத்து மூன்று தனியடியார்களின் வரலாறுகளையும் தில்லைவாழந்தணர் முதலிய ஒன்பது தொகையடியார்களின் இயல்பினையும் வகைப்படுத்துக் கூறுமுகமாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பி தேவார ஆசிரியர்களின் வரலாற்றினையும் அவர் கள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களில் அமைந்த பொருள் நலங்களையும் தம் நூல்களில் முதன் முதல் தொகுத்து விளக்கியுள்ளார். பல்வேறு திருத்தலங்களில்தனித் தனியே ஓதப்பெற்று வந்த தேவாரத் திருப்பதிகங்களை யெல்லாம் ஒருசேரத் தேடித் தொகுத்தற்கு நம்பியே துணை யாக இருந்தார் என்பதற்கு அவர் பாடிய நூல்களே சான்றாக அமைந்துள்ளன.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாப் பதிகங் களிற் பல, நம்பி வாழ்ந்த காலத்திற்கு நெடுங்காலம் பிற் பட்டுத் தோன்றிய ஆசிரியர்களாற் பாடப்பட்டனவாகும். இச்செய்தி கங்கைகொண்ட சோழேச்சரம் இராசராசேச் சுரம் திரைலோக்கிய சுந்தரம் முதலிய திருக்கோயில்களைப் போற்றிய திருப்பதிகங்களாற் புலனாகிறது. தம் காலத்திற்குப் பின்னர் வாழ்ந்த கருவூர்த்தேவர் முதலிய பெரியோர்களாற் பாடப் பெற்ற திருவிசைப்பாத் திருப்பதிகங்களை நம்பி ஒன்ப தாந் திருமுறையாக வரிசைப்படுத்தற்கும் அதனையடுத்துத் திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாக வைத்தற்கும் ஒரு சிறிதும் இயைபில்லை என்பது மேற்காட்டிய குறிப்பினாற் பெறப்படும். திருமுறைவகுத்த நம்பியே தாம் போற்றிபரவும் முன்னோர் நூல்களுடன் தாம் இயற்றிய நூல்களையும் சேர்த் துப் பதினொராந் திருமுறை என்ற பெயரால் ஒரு திருமுறை யாகத் தொகுத்திருக்கமாட்டார். எனவே எட்டு முதல் பதினொன்று வரை அமைந்த திருமுறை வகுப்பு நம்பியால் அமைக்கப் பெற்றிருக்க முடியாது. ஆகவே நம்பியின் காலத்

திற்குப் பின்னரும் சேக்கிழார் காலத்திற்கு முன்னரும் வாழ்ந்த சிவநெறிச்செல்வர்களே ஒன்பது முதல் பதினொன்று முடியவுள்ள திருமுறைகளை வகுத்துத் தந்தனரெனக்கொள்ள வேண்டியுளது.

பதினொராந் திருமுறையில் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார் அருளிச் செய்தனவும், தேவார ஆசிரியர் காலத்தில் வாழ்ந்த ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் ஆகிய பெரியோர்கள் பாடியனவும், தேவார ஆசிரியர் காலத்திற்குப்பின் தோன்றிய திருவெண்காட்டிகள் நம்பி முதலியோர் பாடியனவும், காலங் கடந்த தனி முதல்வனுகிய ஆலவாயில் அவிர் சடைக் கடவுள் வாணபத்திரர் பொருட்டுப் பாடியருளிய திருமுகப்பாசுரமும் ஆகிய அருள் நூல்கள் ஒரு சேரத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு காலவகையால் வேறுபட்டுள்ள இந்நூல்களை யெல்லாம் நம்பி ஒரே திருமுறையாகத் தொகுத்திருந்தால் இயலாது. ஆகவே சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை மட்டுமே நம்பி ஏழு திருமுறைகளாகத் தேடித் தொகுத்தார் எனவும் எட்டு முதல் பதினொன்று வரையுள்ள திருமுறைகள் நம்பி காலத்திற்குபின் தோன்றிய பெருமக்களால் அம்முறையே தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டுமெனவும் கொள்ளுதலே வரலாற்று முறைக்குப் பெரிதும் பொருந்துவதாகும். கி.பி, பதினான்காம் நூற்றுண்டில் இயற்றப் பெற்றது திருமுறைகண்ட புராண மாதலின் தேவாரத் திருமுறைகளையேயன்றி நாளடைவில் வகுக்கப் பெற்று வழங்கிய எட்டு முதல் பதினொன்று வரையமைந்த திருமுறைகளையும் நம்பியே வகுத்தாரென அக்காலத்தில் வழங்கிய செய்தியை உடன்பாட்டுக்கு கூறுவதாயிற்று. வியாசர் எப்படி வேதங்களை ஒழுங்குபடுத்தினரோ அதுபோல நம்பியாண்டார் நம்பியும் தமிழ் வேதமாகிய திருமுறைகளை ஒழுங்குபடுத்தியதால் இவர் "தமிழ் வியாசர்" என பாராட்டப் பெற்றார்.

கடவுள் இருக்கிறார்

திரு: கே லெட்சுமணன் அவர்கள்:
அவிநாசி ரோடு
கோயம்புத்தூர்-(641018)

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்றார் திருவள்ளுவர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறளின் முதல் அதிகாரமான "கடவுள் வாழ்த்து'' என்ற பகுதியின் முதல்பாட்டு ஆகும். முதலும் முடிவும் இல்லாதவர் கடவுள் என்கிறார் வள்ளுவர். ஆகையால் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார். என்ற உண்மை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உள்ளது. என்று தெரிகிறது. எங்கும் நிறைந்தவன் இறைவன் இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது, சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே'' ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'' இறை.

உடம்பிலே உயிரும் உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதைபந்து. பந்துக்குள் ''பிளாடர்'' அதற்குள் காற்று என்பது போல் எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால் அப்பரம் பொருள் இயவுள் எனப்பேர் பெற்றது. ''பெரும் பெயர் இயவுள்'' என்பார் நக்கீரர் எல்லாவற்றையும் கடவுவதனால் கடவுள் எனவும் பேர் பெற்றது.

உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும் அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும்.

''கற்றதனாலாய பயன் என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' (திருக்குறள்

மனிதப் பிறப்புக்கு இறைவழிபாடு இன்றியமையாதது. ஒரு) மாவட்டத்திற்கும் மற்றொரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக்கல் அமைத்திருப்பது போல் விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடாகும். இறை வழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும் இறை வழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர வேண்டும். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும் யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சி தருகின்றன. எறும்பு முதல் யானை ஈறாக எல்லா உயிர்களும் இறைவனை வழிபடவேண்டும் என்பதும் போதருகின்றது.

எறும்புகடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்
பெறுங்கதிகண் டுந்தேறார் பேய்கள் அறிந்த
உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப்படும். (முதுமொழிமேல் வைப்பு

இக்காலத்தில் கடவுள் என்ற ஒரு பொருள் உண்டா இல்லையா, இருப்பின் நம் கண்ணுக்குத் தெரியாமலிருக்க முடியுமா, உயிர்களைப் படைத்தவர் கடவுள் என்றால், புள்ளிமானைப் படைத்த அவர் வரிப்புலியையும் படைக்கலாமா உலகத்தைப் படைத்த அவர் கடற்கோளையும் நிலநடுக்கத்தையும் தோற்றுவிக்கலாமா என்றெல்லாம் ஒருசிலர் வினவுவர், நன்கு ஆராய்ந்திருந்தால் எவராலும் கடவுள் ஒருவர் உண்டு என்பதை மறுக்க முடியாது. கடவுள் வடிவமற்றவர். உலகிலுள்ள இயற்கைப் பொருள்கள் அத்தனையும் கடவுள் வடிவங்களே கடவுள் தூணிலும் இருக்கிறார். அனலிலும் இருக்கிறார்; இதைத்தான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரைக்கூத் தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே''

என்று கூறுகிறார்.

கடவுள் ஒருவரே ஆனால் மக்கள் அவருக்குப் பலபெயர் இட்டழைக்கின்றனர். தண்ணீர் இருக்கிறது. அது ஜலம், நீர், வாட்டர், பாணி, தீளு என்ற பலபெயர்களைக் கொண்டிருக்கிறது. அதனால் ஜலம் வேறு, பாணி வேறு, தண்ணீர் வேறு என்று சொல்லிவிட முடியுமா? தண்ணீர் தட்ப வெட்ப நிலைமைக்கேற்பப் பனிக்கட்டியாகவும், ஆவியாகவும் மாறுகிறது அதைப்போலவே கடவுளும் மக்களின் பழக்க வழக்கங்களுக்கேற்ப பல வடிவங்களைப் பெற்றிருக்கிறார். கண்ணாடிக் கிண்ணத்தின் வடிவத்தையும், நிலத்தையும், அதில் ஊற்றப்பட்ட நீர் அடைவதாக அடுத்தவர்களுக்குத் தெரிவது வெறும் பொய்த்தோற்றமே யல்லாமல் தண்ணீர் எந்தவித மாற்றமும் அடைந்து விடுவதில்லை அதைப் போலவே பூசை செய்யும் மக்களின் தன்மையாலேயே கடவுள் வடிவத்தையும் பல்வகைப் பண்புகளையும் உடையவர் என்று நினைக்கிறோம் ஆனால் அவர்தம் தன்மையில் மாறுபட்டு விடுவதில்லை. இவற்றிலிருந்து கடவுள் ஒருவரே. அவர் இறப்பும் பிறப்பும் அற்றவர் முதலும் முடிவும் இல்லாதவர். பாசமும் பந்தமும் துறந்தவர் திருக்கோயில்களில் காட்சி அளிக்கும் துவாரபாலகர்களில் ஒருவர் ஆள்காட்டுவிரலைக் காட்டி நிற்பது உள்ளே வழிபடச் செல்வோர்க்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவார பாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது.

நம்மிடையே பலர் கடவுளே கிடையாது. கடவுளை ஏன் வணங்க வேண்டும், வணங்காவிடில் என்ன? மனிதவாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழமுடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? என்ற வினாக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வது முறை. விலங்குகளும் உண்ணுகின்றன. உலாவுகின்றன; வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்றோம்; உறங்குகின்றோம். உலாவுகின்றோம் மக்களைப் பெறுகின்றோம் இவை விலங்குகட்கும் மனிதர்கட்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காட்சி அளிப்பது தெய்வ

உணர்ச்சி ஒன்றாலேயேதான் ஏன் கடவுளை வணங்குபவர் கஷ்டப்படுகிறார்? கடவுளை வணங்காதவர் நன்றாக வாழ்கிறார் என்ற கேள்வி நம்மிடையே பலருக்குத் தோன்றும். யார் மிகவும் வாழ்க்கையில் கஷ்டப்படுகிறார்களோ அவர்களுக்கு மிக அருகில் கடவுள் இருப்பார் அவர்களை மிகவும் சோதித்து அவர்களின் பக்தியை நிருபிப்பார் என்பதை பல புராணங்கள் மூலம் அறியலாம். கடவுளை வணங்குவதால் வல்வினைகள் அகல்கின்றன; பிறவிப்பிணி நீங்கும்.

ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். முதல்வன் கடவுள் நம்பிக்கை உள்ளவன். இரண்டாமவன் நம்பிக்கை இல்லாதவன், இருவரும் ஒருநாள் வெளியே சென்றனர். வழியில் ஒரு ஆலயம் தென்பட்டது. முதல்வன் ஆலயத்திற்குள் சென்று ஆண்டவனைத் தொழுதான், வரும் வழியில் ஒரு சிறுகல் தடுக்கி இரத்தம் வந்தது. இரண்டாமவன் ஆலயத்திற்குள் செல்லாமல் வெளியே நின்றபொழுது அவனுக்கு ஒருரூபாய் கிடைத்தது முதல்வனைப்பார்த்து இரண்டாமவன் கூறினான். கடவுளை வணங்கிய உனக்கு காலில் காயமும் வணங்காத எனக்கு பணமும் கிடைத்திருக்கின்றது. என்று சொன்னவுடன் முதல்வன் அங்கிருந்த ஒரு பெரியவரிடம் இதைப்பற்றிக் கேட்டதற்கு அவர் கூறினார். முதல்வனுக்கு பேராபத்து வரஇருந்தது, ஆனால் அவன் கடவுளை வணங்கியதால் சிறுகாயத்துடன் போய்விட்டது. இரண்டாமவனுக்கு பெரும்பணம் வரஇருந்தது. அவன் கடவுளை வணங்காததால் கொஞ்சம்தான் கிடைத்தது என்றார். ஆகையால் கடவுளை வணங்குபவர் கஷ்டப்பட்டாலும் முடிவில் நன்மையே அடைவர்.

கடவுள் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான், ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

''ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே''

(மாணிக்கவாசகர்)

பாலில் நெய் மறைந்திருப்பது போல் பிறஇடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில்

வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பது போல் ஞானிகள் உள்ளத்திலும் திருக்கோயிலிலும் இறைவன்விளங்கி காட்சி அளிக்கின்றான், மற்றஇடங்களில் இறைவனை நினைந்து தியானிப்பதனாலும் துதிப்பதனாலும் வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழி பட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீறாகிவிடுகின்றன.

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால் அத்துணி வெதும்புமே அன்றி வெந்து சாம்பராகாது. சூரியகாந்தக் கண்ணாடியை (லென்ஸ்) வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்றொரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத் துணி சாம்பலாகி விடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியக்காந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெய் யிலுக்கு உண்டு. பரந்து விரிந்து இருக்கின்ற, கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூரியகாந்த கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிறஇடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோ யிலில் இறைவனை வழிபடுவது சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வைப்பது போலாகும் ஆதலால், திருக்கோயில் வழி பாடு இன்றியமையாததாகும்.

''மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே''

என்பது சிவஞானபோதம். கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கவேண்டும் என்பதை வற்புறுத்தவே ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற பொன் மொழிகள் தோன்றின. பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப்பெறுவது போல் எங்கும் நிறைந்திருக் கின்ற இறைவனுடைய திருவருளை திருக்கோயில்களில்உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும். ஒரு பறவை இருசிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்''

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழி படவேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை. ''அன்புடன் ஆசார பூசை செய்து உய்ந்திட வீணாள்படாது அருள் புரிவாயே'' என்று அருண கிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

கருணையே வடிவாகிய இறைவன் உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான் அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீரா டுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பிலுள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றான் அதுபோல் அருட்கடலாயிருக்கிற ஆண்ட வனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது ''ஆர்த்தபிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்'' என்று மாணிக்க வாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்றார்.

கோயிலில் வழிபடுவோர் நீராடித், தூய உடை அணிந்து சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும், ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். கோயிலில் ஒருமைப் பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண்வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்பு தலும் பிறதீமைகள் செய்தலுங் கூடாது, அர்ச்சகர் தரும் பிரசாதங்களைப் பயபக்தியுடன் இருகரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடி காலை அல்லது மாலையில் விளக்கு முன்னே வழிபடவேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்தவீட்டில் தெய்வகடாட்சமும் திரு மகள் விலாசமும் உண்டாகும்.

''வல்லமைசேர் கடவுளிலா இடமொன்றில்லை
மகாசக்தி இல்லாத வஸ்து இல்லை:
அல்லிவில்லை அல்லலில்லை அல்லலில்லை
அனைத்துமே தெய்வமென்றால் அல்லலுண்டோ''

———

[சிவ சிவ

எந்தாய்! இன்றும் ஆளாயோ?

திரு: கு. சோ. முருகன் அவர்கள்,
சர்வசன உயர்நிலைப்பள்ளி
கோயமுத்தூர்-(641004)

'போற்றும் அடியார் இனத்தொன்று
போரூர் முருகா! மனமிரண்டு
போகா வகைநின் பதமூன்று
பொய்யேன் உய்ந்து போதற்கே
சீற்றங் கொண்டே நான்காயும்
சிறியேன் அஞ்சு வினையெல்லாம்
செற்றே பவத்தீ ஆறுதற்குச்
சிறிதே கடைக்கண் பாராயோ?
சாற்றும் எழுதா மறைதனக்குச்
சற்றும் எட்டாத் தன்மையதாம்
சாற்றற் கரிய சீருடைய
செம்பொன் பதுமப் பாதத்தே
ஏற்றுன் பத்தன் ஆக்கிளனை
எந்தாய்! இன்றும் ஆளாயோ
ஏற்ருன் குமரா! உமைசிறுவா!
எய்த்தேன், ஏற்றே அருள்தருவாய்!

பிழைதிருத்தம்

மலர் 25 இதழ் 6 ல் வெளிவந்த பேரா இயற்கை தரும் நிலை என்ற கட்டுரையில் பக்கம் 302ல ஆண்டவன் திருவருளைப் பெற விழையும் திருஞானசம்பந்தர் என்றிருப்பதை திருநாவுக்கரசர் என்று திருத்திக்கொள்ளவும்.

பக்கம் 303 ல் இருவர் பாடல்களாலும் என்றிருப்பதை இவ்விரு பாடல்களாலும் என்று திருத்திக் கொள்க.

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

13 குபேரனுக்கும் தலைவர்

நல்ல நூல்களை எழுதும் போது பொன் முதலான நல்ல சொற்களுடன் தொடங்குவது தமிழ்மரபு. அம்முறையில் ஒரு புராணத்தை அம்பொன் என்ற சொல்லுடன் தொடங்குகிறது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு. பொன்னே அழகானது. தில்லை நடராஜப் பெருமானுக்குத் தங்க ஓடு வேயப்பட்டது. இறைவனுக்கு மேலே விதானமாக அமையும்பேறு பெற்றமையால் அம்பொன் என்றார். பொன் வேய்ந்த அம்பலத்தில் ஆடும் பெருமானின் திருவடி சூடும் அடியவர். உள்ளதை உள்ளபடி கூறும் நம்புவாய்மையுள்ளவர் நீடு சூத்திர நற்குலம் என உயர்வாகப் பேசப்படுகிறது இவர் பிறந்த குலம். நான்காவது குலத்திற்கு இது பெயர், (To be a slave is not shameful. To have a slave is shameful) (அடிமைத்தனம் அல்லது அடிமையாயிருப்பது அவமானமில்லை. ஒருவரை அடிமைப்படுத்திக் கொள்ளுவதுதான் ஈனமானது என்றார் காந்தி அதுபோல் சூத்திரரார்கப் பிறந்தவர் குற்றவாளியல்ல சூத்திரர் என்று குலத்தை இழிவுபடுத்துபவன் தான் ஈனமானவன். உயர்குலத்தில், இறைவனது முகத்தில் பிறந்தேன் என்ற பிராமணனும் பூசை செய்யும் காலத்து மலரிட்டு வழிபடும் இறைவனது திருவடியிலிருந்து பிறந்தவன் சூத்திரன் என்ற பாக்கியசாலி என்பதை மறக்கக் கூடாது. இது கீழான குலமல்ல. சூத்திரன் என்றால் தாசமகன் எனக் கூறுவது விபரீதமான, உண்மைக்குப் புறம்பான, ஆதாரமற்றபொய். கீழான எதையும் சேக்கிழார் பாடவே மாட்டார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும். சூத்திரகுலம் செய்த புண்ணியத்தால் அக்குலத்தில் பிறந்தார், இளையான்குடி மாறனார். இவரது இயற்பெயர் மாறனார்,

இவர் பிறந்தது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான்குடியா சோழநாட்டில் நள்ளாற்றுக்கு அருகில் உள்ள இளையான்குடியா என இன்னும் சரித்திராசிரியர்கள் தீர்மானிக்க வில்லை. இவர் யாவருக்கும் உணவு அளித்தார். ஏழைகளுக்கு அன்னமிடும் காலத்தில் ஏழைகள் எண்ணிக்கை வளரக்கூடாது அவர்கள் செழித்து வாழவேண்டுமென்றும் அடியார்களின் குலம் பெருக வேண்டுமென்றும் உணவளித்தார். சிவனடியாராக எவர்வந்தாலும் சாதிமதம் முதலிய பாராது கைகுவித்து வணங்கி (காயத்தாலும்) நல்வார்த்தைகள் கூறி (வாக்கினாலும்) மனதார ஆதரித்தார். செல்வந்தரான இவரது நிலையைப் பரிசோதித்துக்காட்ட இறைவன் திருவுள்ளங் கொண்டார். எனவே அவரது செல்வத்தை மெல்லக் குறையுமாறு திருவுள்ளம்பாலித்தார்.

திடீரென்று செல்வம் குறைந்தால் அடியார்கள் வருவது குறைந்துவிடும், செல்வக்குறைவைப் பெரிதாக எண்ணாத இளையான்குடிமாறர், அடியார் வராவிட்டால் மிகவும் வேதனையடைவார். எனவே செல்வம் மெல்லக் குறைக்கப்பட்டது. இது தவிர உலகத்து மக்களும் அவரது வறுமையை வெளிப்படையாக அறிந்து வேதனையடைவர்.

சீலமும் பக்தியுமுள்ள சிவனடியாரான இவரது செல்வத்தை இறைவனால் கூட திடீரென்று குறைக்க முடியவில்லை. சீலமன்றியும் செய்தவம் வேறு ஒன்றுளதோ'' என்பான் கம்பன். நாயனார் ஏற்கனவே சிவனடியார்களுக்குச் செய்த மகேச்சுரபூசையின் புண்ணியம் அவருக்குத் திடீரென்று வறுமைவராது காத்தது. யாவற்றுக்கும் மேலாக இறைவனது இடப்பாதியில் அம்மையிருக்கிறாள். அவள் நாயனாருக்கு திடீரென்று வறுமை ஏற்படாது காத்தாள். எனவே வறுமை மெல்ல வந்தது. இதுவும் இறைவனின் திருவுள்ளமே

மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லையில் வறுமைப்பதம் புக உன்னினர் தில்லை மன்னினர்.

வளஞ்சுருங்கியும் மனம் சுருங்காத நாயனார் (மூப்பு வந்து தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயாத திருநீலகண்டர் போல்) தனது பொருள்களை விற்றும் அடகு

வைத்தும் அடியார்பணியை மேலும் நன்கு செய்தார். இவரைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்ட இறைவர், பிரம விட்டுணுக்களால் கூடக் காண முடியாதவர், தனது வாகனமாகிய காளையையும், தனது தேவியான அம்மையையும் பிரிந்து தனியே வந்தார்.

பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதையாளுடன் இன்றி ஒர்
நற்றவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட நண்ணினர்.

அவரது வாகனமான காளை தருமதேவதை அம்மையோ கருணையின் உருவம், தருமமும் கருணையும் தன்னுடன் வந்தால் அவரது வறுமை உடனே நீங்கிவிடும், அவரைச் சோதிக்க முடியாது. எனவே இறைவர் மழைக்காலத்தில் ஒருநாள் ஊரடங்கியபின் நாயனரின் வீட்டிற்கு வந்தார். அன்று நாயனரும் மனைவியும் பட்டினியுடன் படுத்திருந்தனர். வேளாளருக்குரியது குவளை மலர்மாலை செந்திருவந்தற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளமுடைய நாயனர் கழுத்தில் தினமும் வாடாதமாலையணியும் வழக்கம். முகம் கவலையால் வாடியிருந்தால் மாலையணிந்திருக்க மாட்டார். மாலையில் தேனுண்ண வண்டுகள் மொய்க்கும். நாயனரும் வாடாதமாலை போலத் தன்னிடம் வந்தவருக்கு விருந்தளித்தார் விருந்து கிடையாது என்றால்மாலையே அணிந்திருக்க மாட்டார். எனவே வேரித்தாரான் விருந்தெதிர்கொண்டனன் என்கிறார் கவிஞர் மழையில் நனைந்தவரின் ஈரஉடலைத் துடைத்து அவருக்கு அமுதூட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் தாரமாதரை நோக்கினர். செல்வந்தராயிருந்த காலத்தில் அனேக ஆயிரம் மாதர் வேலையாட்களாக அவர் வீட்டிலிருந்தனர். வறுமை காரணமாக யாவரும்வேலை நீக்கம் பெற்று இன்று நாயனரின் தாரமான மாது மாத்திரமிருந்தாள். எனவே தாரமாதரை நோக்கி "தபோதனர்தீரவே (நமது பிறவிப் பிணிதீர) பசித்தார். நமக்கு உணவில்லாவிட்டாலும் அவருக்குத் தகவுறச் (சரியான) சாப்பாடு எப்படி அமைப்பது? "என்றார்." எனக்கு ஒன்றுதான் தோன்றுகின்றது. நமக்கு யாரும் எதுவும் தரமாட்டார். பகலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அமுது சமைக்கலாம்" என்று கூறிய அம்மையின் மொழி கேட்டு நாயனர்

ஒரு கூடையை யெடுத்துக் கொண்டு இருட்டில், ஏற்கனவே பழகிய வழிபாகையால், தடவித் தடவிச் சென்றார். பறவைகள் உறங்கப் பாம்புகள் புறப்படும் நேரத்தில் சென்றால் அடியாருக்கு அமுதளிக்கும் வள்ளலான நாயனார். மழை நீரில் மிதந்து கொண்டிருந்த நெற்களைக் கூடையில் வாரித்திரும்பி வந்தனர். இருட்டில் செல்ல விளக்குகூட இல்லை. விளக்கையும் விற்று அடியாருக்கு அன்னமிட்டிருப்பார் போலும்! நாயனார் வந்ததும் உணவு தயார் செய்யவேண்டுமென்பதற்காக, வாயிலிலேயே நாயனாருக்காகக் காத்திருந்த அம்மையார் அந்த நெல்லை வாங்கி அலம்பி அடுப்பு மூட்ட எண்ணிய போது நினைவுவர "விறகில்லையே" என்று விளம்பினாள், நாயனார் வீட்டு உத்திரத்திலுள்ள கழிகளை அறுத்து எடுத்தனர். வீடு விழவில்லை என்ன வந்தாலும் வீடு அழியாது. நாயனாருடைய பக்தியும் இறைவனே அடியார் உருவில் அவ் வீட்டிற்கு வந்ததாலும் "அந்தமில்மனை" என அவ்வீடு குறிப்பாகக் குறிப்பிடப்பெறுகிறது. அடுப்பு மூட்டிச் சோறுவடித்த பின் "இனிக் கறிக்கு என்ன செய்வது?" என்று கணவனிடம் கேட்டார், நாயனார் மீண்டும் வயலில் சென்று அங்கு குழிகளில் அரைகுறையாக வளர்ந்திருந்த சிறுபயிர்களின் செடியைப் பறித்துத் தந்தனர். அம்மையார் அவற்றையும் தன் கைவண்ணத்தால் கறிகளாகச் செய்தனர். நெல் முளைகளை வாரிவந்ததால் ஆகாமியம் (தற்காலம் செய்யும் வினைகளையும்) குறும்பயிர் தடவி எடுத்ததால் பிராரப்தம் (முன் பிறவியிற் செய்த வினைகளையும்) மனையின் அலக்குகளை அறுத்ததால் சஞ்சிதம் (பல பிறவிகளில் நாம் செய்து இன்னும் பலனுக்கு வராத பாபக்கூட்டம்) ஆகியவைகளிலிருந்து நாயனார் நீங்கினார். உணவு தயாரானதும் "என் துன்பங்களை நீக்க வந்த அன்பரே! உணவருந்த எழுக" என அழைக்க அடியாரைக் காணோம். ஒரு சோதி தோன்றியது, நாயனாரும் மனைவியாரும் அடியவரைக் காணவில்லையே அவர் அமுதருந்தவில்லையே எனத்துக்கமும் ஏக்கமும் நிறைந்து திகைத்து நின்றனர். அந்நிலையில் இறைவன் அம்மையுடன் இடபவாகனத்தில் தோன்றிக்காட்சி தந்தார். நாயனாருக்கு இறைவன் மூன்று விதமாகக் காட்சிதந்தார். முதலில் வேடம் புனைந்து வந்தார்.

பின் சோதியானார். மூன்றாவதாக அம்மையுடன் இடபவாகனக்காட்சி. கருணையுருவான அம்மையுடனும் தருமதேவதையான இடபத்தில் வந்து "அப்பனே! நீ உன் மனைவியுடன் நம் உலகத்தில், குபேரன் உன் சொற்படி கேட்க இன்புற்று வாழ்வாயாக" என்றார்.

அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இரு நிதிக்கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்க
இன்ப மார்ந்திருக்க என்றேயருள் செய்தான் எவர்க்கு மிக்கான்

இந்தப்பாடல் மகேசுவர பூசைகளில் பாடப்பெறுவது. அணங்கினோடு என்றது அவள் கூட இருந்தால்தான் சிவனடியார்கட்கு விருந்து செய்ய முடியும், நாயனாருக்குச் செல்வமும் வாழ்க்கையும் தேவையில்லை; சிவனடியாருக்கு உணவளிக்கும் (மகேசுரபூசை என்பது இதுவே) அன்பர்கட்கு குறையாத செல்வமளிக்குமாறு குபேரனாகிய செல்வத்தின் தேவதைகளுக்குக் கட்டளையிட்டுக் கொண்டு இன்னும் சிவலோகத்தில் வாழுகிறார்.

குபேரனுக்கும் எசமானரான இளையான்குடிமாறனார் கதையைக் கேட்போர், படிப்போர், நினைப்போருக்கு வறுமையே வராது என்பது பெரியோர்களின் வழக்கு.

"இளையான்றன்குடிமாறனடியார்க்கும் அடியேன்"

சேக்கிழார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

வானோர் அறியா வழி

செல்வி: ச. கோமதி B, A. அவர்கள்,
சோமசுந்தரபுரம் காலனி
மதுரை-[625016]

"ஊனாயுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனாயமுத முமாய்ந் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார்மலர்க் கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனாஅறிவாய் அளவறிந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்"

[திருவம்மானை-16]

முதுகலைப் பட்டதாரிக்குத் தெரியாத ஒருசெய்தி அல்லது வழி ஓர் இளங்கலைப் பட்டதாரிக்குத் தெரிந்திருந்தால் அவர் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்வது இயல்பு. அதுபோல, நம்மைவிட உயர்ந்தோராகக் கருதப்படுகிற வானோர்க்குத் தெரியாத ஒருவழி மானிடராகிய நமக்குத் தெரிந்திருக்குமானால் நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளலாம்தானே? இவ்வாறு வானோர் அறிய வழிஒன்று நமக்குக் கைவந்திருப்பதாகக் கூறி நம்மையெல்லாம் மகிழச் செய்பவர் வாதவூர் அடிகளாகிய மணிவாசகப் பெருந்தகை. அடிகள் குறிப்பிடும் அவ்வழி என்ன என்று காணும் முன்பு அடிகளாரின் நூலமைப்பு முறை, அதற்கான சூழ்நிலை இவற்றைப் பற்றிப் பொதுவான சில செய்திகளை அறிந்து கொள்ளுதல் நலம்.

வாதவூர்அடிகளின் சமயத்தொண்டின் சிறப்பு, கருத்துக் கெட்டாதவராகக் கருதப்பட்ட இறைவனை நம் போன்ற எளியர்க்கும் எட்டுமாறு செய்ததுதான். "யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்" ஆகிய சிவபெருமான் "யாவர்க்கும் கீழாம்" நம்மையும் ஆட்கொள்வான்-அல்ல. ஆட்கொண்டான்-என்றுக் கூறித் தன்னம்பிக்கை ஊட்டுவது அடிகளின் தனிச்சிறப்பு. திருவாசகத்தை ஊன்றிப் படிப்

பார்க்கு, இந்தத் தன்னம்பிக்கை நூல் முழுவதுமே ஊடுருவி நிற்பது புலனாகும். பௌத்த, சமணசமயங்கள் நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த காலத்தில் அடிகள் அருளிய நூல் திருவாசகம். என்பதைக் கருத்திற் கொண்டால், இந்தத் தன்னம்பிக்கை முரசு ஏன் ஒலித்தது என்பதை உணரலாம். சமண, பௌத்த சமயங்கள் பெரிதும் துறவு நெறியையே வலியுறுத்தியதோடு கடுமையான சமயக் கோட்பாடுகளையும் விதித்தன. எனவே இதையொட்டி சைவ சமயத்திலும் மாயா வாதம், உடலை ஒறுத்தல், கடுமையான விதிமுறைகள் ஆகியவை ஓரளவு தலைதூக்கி இருந்திருக்க வேண்டும் இத் தகையச் சூழ்நிலையில் ஒரு சராசரி மனிதனுக்கு 'சமயவாழ்வு என்பது நமக்கு இயலாத ஒன்று, கைவராத ஒன்று" என்ற தோல்வி மனப்பான்மையே தோன்றியிருக்கும். எனவே அன் றைய சூழ்நிலையில் முதல் தேவைசமய வாழ்வின் எளிமையை வலியுறுத்திமக்களிடைத் தன்னம்பிக்கை வளர்ப்பதே என்று அடிகளார் கருதியிருப்பார் என்று கொள்ளலாம். எனவே தான் இறைவன் திருப்பெயரைஓதுதல், அவன் திருப்புகழைக் கேட்டல் ஆகிய எளிய வழிகளிலேயே இறைவன் திரு வருளைப் பெறலாம் என்று அடிகள் பல்காலும் வலியுறுத்துகிறார்.

> "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமஎனப் பெற்றேன்
> தேனாயின் னமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
> தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்கருள் செய்தான்
> ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"
>
> [திருவேசறவு–10]

என்ற திருப்பாடல் திருவைந்தெழுத்து ஓதுவதன் மூலமே இறைவன் திருவருள் கைவரப் பெற்ற எளிமையைக்காட்டும் முந்திய யுகங்களில் வலியுறுத்தப்பட்ட ஞானயோகம், கரும யோகம் ஆகியவை கலியுகத்துக்கு ஒவ்வா என்றும் கலியுகத் தில் பக்திமார்க்கமே போதும் என்றும் வேதாந்த சமயம் கூறுவதும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது,

இத்தகைய புதிய கருத்துக்களைப் பரப்புவதற்கு அடிகள் அமைத்துக் கொண்ட நூலமைப்பு முறையின் எளிமையும் வியக்கத்தக்கது, இறைஇலக்கியமென்றால்கடுமையான நடை

யில் சிலகுறிப்பிட்ட செய்யுள் வடிவங்களில் இருக்க வேண்டு மென்ற நிலையைமாற்றியமைத்தது அடிகளின் தனிப்பெருமை ஊஞ்சற் பாட்டு, அம்மானை. பூவல்லி, பொற்சுண்ணமிடித் தல் போன்ற எளிய சூழ்நிலைகளை இறையிலக்கியத்துக்கு அடித்தளமாக அமைத்துக் கொண்ட பெருமை அடிகளா ருடையது. கண்ணனைக் குழந்தையாகக் கருதிப்பாடி வைணவ இலக்கியத்தில் புதுவழி சமைத்த பெரியாழ்வாரைப் போன்று வாதவூரடிகள் சைவ இலக்கியமரபிலேயே ஒரு புதுவழியைத் தோற்றுவித்தார் என்று உணர்தல் வேண்டும்.

எது? இனி, அடிகள் காட்டிய "வானோரறியா வழி" தான் இதற்கு விடை தருவது கீழ்கண்ட திருப்பாடல்.

> "யானே பொய்யென் னெஞ்சும்
> பொய்யென் அன்பும் பொய்
> யானால் வினையே னழுதா
> லுன்னைப் பெறலாமே
> தேனேயமுதே கரும்பின்
> றெளிவே தித்திக்கு
> மானே யருளாயடியே
> னுனைவந்து றுமாறே"

[*திருச்சதகம்—ஆனந்தபரவசம்—10*]

எத்துணை குறைகள் நம்மிடம் இருப்பினும் அரனிடம் முறை யிட்டு அழுவோமானால் அவன் அருள் உறுதியாகக் கிட்டும் என்ற இந்த வழிதான் நமக்குரிய தனிவழி; வானோரறியாவழி. ஒன்று தேவை, இந்த அழுகை நெஞ்சங் கலந்த அழுகையாக. உண்மையான அழுகையாக இருத்தல் வேண்டும். "கிளிசரின் கண்ணீர்" அழுகையாக இருந்துவிடக் கூடாது. இந்த எளிய வழியையேனும் நாம் பின்பற்றுவோமாக!

(குறிப்பு: 26–6–'74 ஆனி மகம் மணிவாசகப் பெருந்தகையின் குருபூசையையொட்டி எழுதப் பெற்றது.)

முன்னறி தெய்வம்

வித்துவான் திரு கோவிந்தசாமி அவர்கள்
தமிழாசிரியர் திருமுக்கூடல் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் சிவபெருமான் தம் இருமக்களான விநாயகரையும், குமரனையும் அழைத்துத் தம்மிடமிருந்த மாங்கனி ஒன்றை அவர்களுக்குக் காட்டி உங்கள் இருவரில் உலகம் முழுவதையும் சுற்றிவிட்டு முதலில் வருபவர் எவரோ அவருக்கு இக்கனி கிடைக்கும் என்றார். அதைக்கேட்டதும் முருகன் தம்முடைய மயில் மீது அமர்ந்து உலகைச் சுற்றிவரத் தொடங்கினர். விநாயகரோ தம் தாய் தந்தையரைச் சுற்றிவந்து வணங்கி நீங்கள்தான் உலகம். உங்களைச் சுற்றியதால் உலகையே சுற்றி வந்தது போலாகும். ஆதலின் நான் உலகைச் சுற்றி வந்துவிட்டேன் எனக்கூறிக் கனியைப் பெற்றுக் கொண்டார். உலகம் முழுவதையும்சுற்றி வந்தும் பழம் தனக்குக் கிடைக்காமையால் ஏமாற்றமடைந்த முருகன் தாமே ஒரு பழமாக நின்றார்.

இந்நிகழ்ச்சியின் மூலம் தந்தையும் தாயும்தான் முன்னறி தெய்வம் என்பதை விநாயகப்பெருமான் உலகிற்கு உணர்த்தி விட்டதை உணரலாம்.

தாய் தந்தையர் சிறப்பைச் சான்றோர்கள் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என அறிவுறுத்தினர்.

ஈன்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையர்க்குக் கைம்மாறு இயற்ற எவரால் இயலும்? நூறுவயதளவும் அடிமையாக இருந்து, மூன்று உலகங்களிலுள்ள பொருள்கள் முழுவதையும் அளித்து அவர்களை வழிபடினும் அவர்கள் ஒரு நாள்வளர்த்ததற்கு அஃது ஈடாகாது.

''ஈன்று வளர்த்த தாய்தந்தைக்கு
எவரே கைம்மாறு இயற்றிடுவார்
ஆன்றமதலை நூறுவய(து)
அளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருள்
முற்றும் அளித்து முறைமுறையே
ஏன்று வழிபா(டு) இயற்றிடினும்
ஒருநாள் வளர்த்தற்(கு) இயையாதே''

முந்தித் தவம்கிடந்து முன்னூறு நாள் சுமந்து அந்திப்பகலாய் ஆதரித்து வளர்ப்பவள் தாய். எனினும் அக்குழந்தையின் நலனையே தன் நலனாகக்கருதி கற்பித்துச் சிறந்து சான்றோனாக்குதல் தந்தையின் கடனாக உள்ளது.

''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே''

என ஒருதாய் கூறுவதாகப் புறநானூற்றுப் பாடல் நமக்கு எடுத்தியம்புகிறது.

தந்தையினால் தான் தாய்க்கும் சிறப்பு ஏற்படுகிறது. தந்தையின்றேல் தாய்க்குச் சிறப்பில்லை தன்னுடைய மகனைச் சான்றோனாக்குவதற்காக அரும்பாடு படும் தந்தைக்கு எவ்வகையில் நன்றிசெலுத்த இயலும்? ஈன்று புறந்தந்ததாயினும் தந்தைக்கு மகனை வளர்க்கும் பொறுப்பும் கடமையும் மிக அதிகமாக உள்ளது. இவ்வுலகில் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள தந்தைக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காகவே ஈன்றெடுத்த தாயின் பெயரைக் குறிப்பிடாமல் தந்தையின் பெயரிலுள்ள முதல் எழுத்தை மகன் தன்னுடைய பெயருக்கு முன் இடுவது வழக்கமாக இருந்து வருகிறது.

அறுசுவை உணவைத் தன் மகனுக்கு அன்புடன் ஊட்டுபவள் தாய், ஒழுக்கமுடைய கல்வியைக் கற்பிக்க முயல்பவர் தந்தை. இவ்விருவரும் இல்லையேல் அறுசுவை உணவும், சிறந்த கல்வியும் ஒருவனுக்குக் கிடைப்பது அரிது. தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம் என்பது ஆன்றோர் மொழி.

தந்தை, தாய் சொற்கடவாது காட்டிற்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் வசித்துவிட்டுத் திரும்பிய இராமபிரான்

வரலாறு தந்தை, தாயிடம் மைந்தன் ஒவ்வொருவனும் எவ் விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

தன் தந்தைவிரும்பிய பெண்ணை அவருக்கு மணமுடிக்க வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய மணிமுடியைத் துறந்ததோடு தானும் மணம் புரிந்து கொள்ளாமல் காலம் கழிப்பதாக உறுதி கூறி, தந்தையின் விருப்பத்தை நிறை வேற்றிய சிறந்த மகனாகப் பாரதத்தில் திகழ்பவர் பீஷ்மர்.

தந்தையின் சொற்கேளாது, தாயின் சொல்லை இகழ்ந்து. குருவின் ஆணையை மறந்து, அறநெறி பிறழ்ந்து நடப்பவர் ஆகிய நால்வரும் அழலின்கண் அடைவர்.

''தந்தையுரை தட்டினவன் தாயுரை இகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர் தமாணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி மாறினவர் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய்கண்டீர்''

அரசன், ஆசிரியர், தாய்தந்தை, தனக்கு முன்பிறந்த சகோ தரன் ஆகிய இவ்வைவரையும் தெய்வம் போலத் தொழுது எழவேண்டும் என்பது உலகோர் கண்ட நெறிமுறையாகும்,

''அரசன் உபாத்தியாயன் தாய்தந்தை தம்முன்
நிகர்இல் குரவர் இவ்வைவர் இவரிவரைத்
தேவரைப் போல் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்டநெறி''

சண்முகசிகாமணிக் கவிராயர் சிவகாமசுந்தரி ஆகியோர்க்கு அருமை மகனாகப் பிறந்த குமரகுருபரர் ஐந்தாண்டளவும் பேசாமல் ஊமையாய் இருந்த நிலையைக் கண்டு நடுங்கிய பெற்றோர் திருச்செந்தூர் கோயிலுக்குச் சென்று முருகப் பெருமான் எதிரே கிடத்தித் தம் குழந்தை பேசவேண்டு மென்பதற்காகப் பட்ட துயரை என்னென்பது.........குமர குருபரர் பேசும் திறன் பெற்றதைக் கண்டு அவரை ஈன்றோர் அடைந்த மகிழ்ச்சியை எவ்விதம் அளவிட்டுரைப்பது? அவர் கள் முருகப் பெருமானை வேண்டி ஆற்றிய தவத்தின் பயனாக நாம் குமரகுருபர அடிகளைப் பெறும் பேறு பெறமுடிந்தது.

தாயும் தந்தையுமே முன்னறி தெய்வம் என்பதை உல கிற்கு உணர்த்துவதற்காகவே இறைவன் எங்கும் உமா தேவியுடன் வெவ்வேறு பெயரில் வீற்றிருப்பதை அறியலாம்.

காஞ்சியில் ஏகாம்பரநாதர் காமாட்சியாகவும், மதுரையில் சோமசுந்தரர் மீனாட்சியாகவும், காசியில் விசுவநாதர் விசாலாட்சியாகவும், நாகையில் காயாரோகணர் நீலாயதாட்சியாகவும் வீற்றிருந்து அடியவர்கட்கு அருள் புரியும் சிறப்பை எண்ணுந்தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது.

அருட்பிரகாசவள்ளலார் இராமலிங்கஅடிகள் இறைவனை நோக்கி "தந்தையே நான் வேண்டுவதைக் கேட்டு அருள் புரியுங்கள். உயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்யவேண்டும், எங்கும் உனது புகழை எடுத்துக் கூறவும். சுத்த சிவசன் மார்க்கம் தழைத்தோங்கவும், நான் ஏதேனும் தவறு புரியின் நீ அதைப் பொறுத்தருளவும் வேண்டும். உன்னைவிட்டுப் பிரியாத நிலையையும் எனக்குக் கொடுத்தருள்" என வேண்டுகின்றார்.

"அப்பாநான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
எந்தைநினதருட் புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே"

சிவபெருமான் எனக்குத் தந்தையும் தாயுமாவார் எல்லோருக்கும் தலைவராக இருக்கும் அவரே அவர்கள் அனைவருக்கும் தாயும் தந்தையுமாக இருக்கின்றார். ஆனால் தனக்கு மட்டும் தாயும் தந்தையுமில்லாதவர். எத்தகையவரும் மனத்தினால் நினைத்தற்கு அரியவராகிய சிவபெருமான் தானே முன்வந்து என் உள்ளத்தில் தங்கியுள்ளார் எனக்கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

"எந்தையாய் எம்பிரான்; மற்றுயாவர்க்கும்
தந்தைதாய் தம்பிரான் தனக்கஃதிலான்
முந்திஎன்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே"

தந்தையும் தாயும்தான் முன்னறி தெய்வம் என்பதை உணர்ந்து அவர்களைப் போற்றுவதுடன், அதை நமக்கு உணர்த்தும் இறைவனைப் போற்றி உய்திபெறுதல் நன்றாகும்.

முற்றும்

ஈனமிலாப் புகழ் அண்ணல்

திரு, ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,
E. 168 அண்ணுரோடு, (ப்ளாக் 17)
நெல்வேலி-1.

இராவணனைக் கொன்று, இலங்கையை வென்ற இராமபிரான் நிறுவி வழிபட்ட தலம் இராமேச்சுரம் என்பர். இராவணனைக் கொன்றமையின் ஏற்பட்ட பாவம் நீங்குதற் பொருட்டு, இராமபிரான் தாமே மணலில் இலிங்கம் சமைத்து வழிபட்ட தலமூர்த்தி இராமநாதர் எனப்பெயர் பெற்றது இவ்வண்ணம்தான்.

சீதாப்பிராட்டியைக் கொடுமையாகக் கவர்ந்து சென்ற அரக்கன் இராமரிடம் போர் புரிந்து அழிந்த பழங்கதையினைப் புகலியர் கோமானிடமிருந்து கேட்கலாம்.

தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவிய லும் முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னர்கள்தம் மேல் வினை வீடுமே.

சீதாதேவியை வஞ்சித்துக் கவர்ந்த தென்னிலங்கைக்கோமான் பத்துத்தலை இராவணன் ஆட்சியும் மாட்சியும் ஒரு சேரக் கவிழ்ந்தன. அரக்கன் ஊரை வென்றும் அவன் தலையைக் கொய்தும் பழி ஈட்டிய இராமபிரான் அப்பாவம் போவதற்காக இராமேச்சுரம் அமைத்து வழிபட்டார். அம்பு எய்தும் வில் வீரராகிய இராமரை ஞானசம்சந்தர் இராமன் என்னும் பெயர் கூறுமலேயே பாடுவார். ஏவியலுஞ் சிலையண்ணல் என்னும் சொற்றொடர் வில்வித்தை மேதையென அவரை உணர்த்தும். வில்லேந்திய உத்தமன் எனில் இராமர் ஒருவரைத்தான் செப்பும் என்றுப்போல், பெயர் பகராது பாடுவார் பிள்ளையார்.

இராமபிரான் அமைத்து வணங்கிய இராமேச்சுரத்தை நினைந்து வழிபடுவோர் வினைகள் அகலப் பெறுவார்கள். இராமரே தம் பழி போவதற்காக என்று ஆக்கிப் பணிந்த

திருமூர்த்தி எல்லாப் பழிகளையும் போக்கியருளாது போவாரோ?

இராமாயணக் கதை இன்னும் சிறிது ஆழ்ந்து பேசப் படும் அடுத்தபாட்டில்; மாயமானைப் பார்த்து அன்னை சீதா தேவி மயங்கிய வரலாற்றினை நினைவூட்டுவது.

மானன நோக்கிவை தேகி தன்னையொரு மாயை யால்
கானதில் வவ்விய காரரக் கன்னுயிர் செற்றவன்
ஈனமிலாப் புக ழண்ணல்செய் தஇராமேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகிநின்றதொரு நன்மையே.

பொய்மானை எதிரே நிறுத்தி வைதேகியினிடம் அதன்பால் ஆசை உண்டாக்கி, வஞ்சனை வழியில் தண்டகாரண்யத்தில் தேவியைக் கவர்ந்து அவன் வந்தமையினை ஞானசம்பந்தர் வெகு சுருக்கமாய் வர்ணிப்பார். கார்அரக்கன் எனும் சொல் மதிமயங்கிய, இருள்வண்ண அரக்கனைச் செப்பும்.

அவனுடைய உயிரை மாய்த்தவர் இராமபிரான் அவரோ ஈனமிலாப் புகழண்ணல், குற்றம் குறை ஏதும் எவருமே காணவொண்ணாப் புகழ்பூத்த செம்மல். அத்தகைய உயரிய குணக்குன்றம் அமைத்து வழிபட்ட தலம் இராமேச்சுரம் எனில் தலத்தின் பெருமை எம்மட்டு எனக்கூற இயலுமோ? அறிவும் பிறநலன்களும் ஒன்ருய் அருளும் மங்கல மூர்த்தம் இராமநாதர்!

அரக்கனைக் கொன்ற பழி தீர்வதற்காக இராமபிரான் வணங்கிய பதி எனக் கூறும் சம்பந்தர், அதே மூச்சில் இராம பிரானை எப்பழி சாரும்? வஞ்சனையினுல் தேவியைக் கவர்ந்த கொடிய அரக்கனைத் தண்டித்த இராமபிரான் ஈனமிலாப் புகழண்ணல் அன்றோ என்று நமக்கு நினைவூட்டுவார். ஒரு பாவமும் தீர்வதற்காக அல்ல, குற்றம் ஏதுமே இல்லாத உத்தம புருஷன் இராமன் நயந்து வணங்கிய பதியென மாற்றி யுரைப்பது இப்பாடல்

மீட்டும் பழி போக்கும் பேச்சு

ஒரு தலையைக் கொய்தால், ஒரு மடங்கு பழி சேரும் எனில் பத்துத் தலைகளைக் கொய்தால், பாவம் எத்தனை பெரிது? ஒற்றைத்தலை படைத்தப் பத்துப் பேரைக்கொன்று

வீழ்த்றியதற்கு இணைதானே இராமன் செயல்? எனவே, கொலை ஒன்றல்ல, பத்தாம். அப்பத்துப் பாவமும் போவதற் காகத்தான் இராமபிரான் பணிந்து போற்றினர் இப்பதியில்!

அணையலை சூழ்கடல் அன்றடைத் துவழி செய்தவன்
பணையிலங் கும் முடி பத்திறுத் தபழி போக்கிய
இணையிலி யென்று மிருந்தகோ யில்இராமேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத் தத்துயர் நீங்குமே.

இராமபிரான் அலைகள் அணைத்து நிற்கும் கடல் சூழ் தீவு ஆகிய இலங்கைக்கு அந்நாளில் குறுக்கே கடலில் நீரை யடைத்து வழியமைத்துக் கொண்டார். அவர் பெருமையோடு விளங்கிய பத்துத் தலைகளையும் கிள்ளிக் களைந்தார். அந்தப் பாவம் போக்கியருளியவர் இணையிலா எம்பெருமான் வீற் றுள்ள திருக்கோயில் இராமேச்சுரம் ஆகும். ஆங்குப்போந்து துணையில்லா ஆதிப் பரம்பொருளாகிய சிவபெருமானின் தூய மலரடிகளைப் பணியின், பாவங்கள் போகுமே!

பழிபோக்கிய இணையிலி என்பது சிவபிரானின் பெருமை யினைப் பகரும் வாசகம்.

இராமபிரான் மட்டுமல்லாது மற்றைய சில இராமாயணப் பாத்திரங்களைக் காண வேண்டின், திருவுசாத்தானம் எனும் திருப்பதிக்குச் செல்லவேண்டும். பெரியநாயகியம்மையாரு டன் மந்திரபுரீசர் எழுந்தருளியுள்ள அந்தத் தலத்தினை இந் நாளில் திருக்கோயிலூர் என்பர்.

நீரிடைத்து யின்றவன் தம்பி நீள்சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னநு மான் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்த எம்
சீருடைச் சேடர் வாழ் திருவுசாத்தானமே.

இராமரின் கட்சி விலங்குகளைக் கொண்டது. கரடி ஒன்றும் வானரம் இரண்டும் இப்பாடலில் வந்துபோம். நெடிய பிரா யத்து அந்தச் சாம்புவானும் போரிட்ட சுக்கிரீவனும் அநு மனும் தொழுத இடமாம் திருவுசாத்தானம்,

பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலும் அவருடைய இளவல் இலக்குமணனும் தொழுத இடம். இராமர் வணங் கும் இடம் எனில், உடன் இராம பக்தனாகிய அனுமனும்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

"தாதை போல் தனயன்"

வித்துவான்: திரு. வெ. வேம்பன் M. A. அவர்கள்;
திருவெண்காடு.

நாட்டில் "தாயைப் போற், பிள்ளை. நூலைப் போற் சேலை" என்ற பழமொழி யாவரும் அறிந்ததே. மேலும், ஒரு சிறுவன் அவன் தந்தைபோல் இருப்பனாகில், அவனை "அப்பனைப் போல் பிள்ளை" இருக்கிறான் என்று கூறும் வழக்காறும் உள்ளது. நம் சைவசமயக் குரவர்களில் திருஞானசம்பந்தர் பெருமானுக்கு "ஆளுடைய பிள்ளை" என்ற சிறப்புப் பெயரும் உண்டு ஏனைய திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் முதலியோரையும் முறையே "ஆளுடையஅரசு" 'ஆளுடையநம்பி' ஆளுடைய அடிகள்' என்பர். இங்கு திருஞானசம்பந்தரைப் "பிள்ளை' எனக் கூறியதற்குக் காரணம் அவரின் பிள்ளைமைத் தன்மைக் காகவும், நால்வரில் மிகச்சிறிய வயதில் "அருள் ஞானம்" ஊட்டப் பெற்று, பதினாறும் ஆண்டிலேயே வீடுபேறு பெற்ற சிறப்புகள் நோக்கியுமாம். இவை வெளிப்படை

(முன் பக்கத் தொடர்ச்சி)

வணங்க வேண்டியதுதானே நம்பிரானை? இவர்கள் [illegible]னை வரும் தொழுத இடத்தே வீற்றவர் காலகூடம் எனும் பழைய நஞ்சைப் பருகிப் பாரைப் பாதுகாத்த எம்பிரான். சிறும் சிறப்பு மி[illegible]ப் பெரியவராகத் திகழும் சிவபிரான் உறைய[illegible] பதி, திருவு[illegible]த்தானம் ஆகு[illegible].

'சீரிடைத துயின்றவன்' நிம்மதியாய் அப்பாற்கடலில் நடுவே படுத்துள்ளார் எனில், அக்கடலில் எழுந்த கொடும் நஞ்சை நமபிரான் குடித்து உலகினைக் காத்தனை [illegible]னல்தான் காக்கும் கடவுளாகப் பரமசிவன் ஆற்றும் பணி[illegible]

ஆனால் அவர் தம் "உயிர் தந்தையாம்" "பெண்ணினல்லா ளோடுடனாகிய பெருந்தகை" போன்று செயற்கரிய செயல் களும் செய்து "பிள்ளை" என்ற பட்டத்துக்கு உரியவரு மாகிறார். என்பதை அறிய நமக்கு மகிழ்வும் உவகையும் பெருகுவது இயல்பே. இச்சிறப்பை எடுத்துக் காட்டியவர், "அலகில்சோதியான் அம்பலத்தாடுவானின்" திருவிளையாடல் களை இயம்பவந்த பரஞ்சோதி மாமுனிவரேயாம். அவர் தாம் பாடிய திருவிளையாடல் புராணத்தில், திருஞானசம்பந்த பெருமானுக்கு வணக்கம் கூற வரும்போது, இச்சிறப்பினைச் சுட்டிக்காட்டி வணங்குகிறார். அப்பாடல் வருமாறு:

"கடியவிழ் கடுக்கைவேணுத் தாதைபோற் கனற்கண்மீனக்
கொடியனை வேவநோக்கிக் குறையிரந் தனையாள் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயிரளித்துக் காத்த
முடியணி மாடக்காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்"

திருஞானசம்பந்தப் பெருமான் தம்பாக்களில் தம "உள்ளங் கவர் கள்வனின்" பலவகையான அருட் செயல்களைக் குறிப் பிடுகின்றார் அவற்றில் மாதோர் பாகன் மன்மதனின் உடலை எரித்து, அவன் மனையாட்டிக்கு அருள் சுரந்த இரு நிகழ்ச் சியைப் பலவிடங்களில் குறிப்பிடுகிறார். சில வருமாறு.

1. மகரத்தாடு கொடியோன் உடலம்பொடி செய்து அவனுடைய
நிகரொப்பிலாத் தேவிக்கருள்செய் நீலகண்டனூர்.
(திருச்சண்பைநகர் 1. 66. 3)

2. காமனை யீடழித்திட்டவன் காதலி சென்றிரப்ப, சேமமே உன்றனக்
கென்றருள் செய்தவன். (திருவெண்டுறை 3. 60. 9.)

3. கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற்காரிகை மாட்டருளி.
(திருத்தோணிபுரம் 3. 100. 1.)

திருஞானசம்பந்தரின் பாக்களில் உள்ளந்தோய்ந்த பரஞ் சோதியாருக்கு இந்நிகழ்ச்சி ஞாபகம் வந்து, இச்செய்திகளைக் கொண்டே ஆளுடைய பிள்ளையையும் வழிபடுகிறார். அப் படி வழிபடும் போது, தம் குருவாம்சண்பை வேந்தரின் கருத்துகளை மட்டுமின்றி அவர் கையாண்ட சொற்களையும் வைத்து பாசெய்தார். இது நன்னூல் கூறிய 'முன்னோர் பொருளையன்றி, அவர் மொழியும் பொன்னே போற் போற் றுவும்' என்ற கருத்தினை வலியுறுத்துவதாம். (பொது சூ. 9)

தமிழாகரர் மன்மதனைக் குறிப்பிடும் போது 'மகரத்தாடு கொடியோன்' எனவும் 'சுறவஞ்செறி வண்கொடியோன்' எனவும் கூறுவார். இங்கு 'கொடியோன்' என்பது மன்மதன் மீன் பொறித்தக் கொடியை உடையவன் என்பதாகும். மற்றும் அவன் செய்யவந்த செயலாம் இறைவன் மாட்டுக் காமத்தைத் தூண்டவந்தது கொடிய செயல்ஆகும் என்பதை தொனிப் பொருளாகவும், நயம்பட வைக்கிறார் மேலும் அவனை எரித்ததை 'வேனில்வேள் வெந்தெழக் கண்டவர்' எனவும் (2. 120 .2) ''உடலம் பொடிசெய்து'' எனவும் (1. 66. 3.) ''காய்ந்து'' எனவும் (3. 100. 1) குறிப்பிடுகிறார். அவன் மனைவி இரதி தனக்குத் 'தாலிப்பிச்சை' இறைவனிடம் கேட்டதைத் ''தேவிக்கருள் செய் நீலகண்டனார்'' எனவும் ''காதலி சென்றிரப்ப சேமமே உன்றனக்கென்று அருள் செய்தவன்'' எனவும் குறிப்பிடுகிறார்.

பரசமய கோளரியாம் சம்பந்தர் மதுரை சென்றபோது, ''தென்மதுரை மாறனார்', அமணர் சொல்கேட்டு, அவர்தங்கியிருந்த விடுதிக்குத் தீ வைத்தான். அத்தீயைச் ச ண் பை ப ஆண்டகையார் ''பையவே சென்று பாண்டியற்காகவே'' என்றருளினார்: உடனே நின்றசீர்நெடுமாறன், சூலைநோயால் தொடக்குண்டுகூன்பாண்டியனானன்.நெடுமை குறுகியேதும் 'பொடி செய்தது' தானே. மேலும் அவனும் தன் கொடியில் மீன் இலச்சினைக் கொண்டவன். பாலறுவாயருக்குச் செய்த தீங்கும் கொடியதானதால் பாண்டியனும் கொடியோன் ஆனான். அவன் மாதேவி, வளவர்கோன் பாவை, தனக்குத் தாலிப்பிச்சைச் கேட்க பாலறுவாயரும் 'திருநீற்றைப்போற்றி தேற்றித் தென்னன் உடலுற்ற தீயபிணியாயினத் தீரபாடல்கள் பத்தும் சாற்றினார். இங்ஙனம் சமிழாளியாரும் மீனக் கொடியவனை வேவ நோக்கினார்: கற்பின் பிடியான சடையான் வேண்டப்பின் உயிரளித்துக் காத்தார்'' என்கிறார் பரஞ்சோதியார். இருவரும் 'கொடியோன்' என்ற சொல்லை தம் பாடலில், சம்பந்தர் போன்றே நயமுற வைத்துப் பாடி மகிழ்கிறார்.

இங்ஙனம் நீலகண்டரும், தோணியுரத் தோன்றலும் ஒத்தசெய்கை செய்தனர். அதனால் கவுணியர்குலதீபம் 'கடிய விழ்கடுக்கை வேணி தாதைபோல்' வராகிறார். எனவே ஆளுடைய பிள்ளை என்ற திருநாமம் சிறக்கப் பெற்றார்,

உடம்பிடித் தெய்வம்

புலவர்: திரு தெ. முருகசாமி பி. ஓ. எல் அவர்கள்
இராமசாமி தமிழ்க்கல்லூரி
காரைக்குடி.

உடம்பிடி என்பது வேல், 'உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்' எனப் பெரும்பாணாற்றுப் படையில் (76) வழிப் போக்கர்கள் வைத்திருந்த வேலை உடம்பிடி என்ற சொல்லால் கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிப்பிடுகின்றார். உடம்பிடித்தெய்வம் என்பது உடம்பிடியையுடையதெய்வம் என்று முருகக் கடவுளையும் உடம்பிடி ஆகிய தெய்வம் என முருகனது வேலையும் குறிக்கும்.

இளங்கோவடிகள் வஞ்சிக்காண்டத்தில் குன்றக்குரவை பகுதியில் "கடம்புசூடி உடம்பிடியேந்தி, மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்" என்று முருகன் உடம்பிடி யேந்திவருவான் என்பதைக் காட்டினார். கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் வள்ளியம்மை திருமணப் படலத்தில் "ஓவியமனைய நீராள் உடம்பிடித் தடக்கையோனை (153) என்றும் "சூரன் உரந்தனை முன்பு கீண்ட உடம்பிடியிருந்த" (178) என்றும் முருகனை உடம்பிடித் தெய்வமாகக் காட்டினார். இங்ஙனம் உடம்பிடியை உடைய தெய்வமாக முருகனைக் காட்டிய கச்சியப்பர் ஓரிடத்தில் மட்டும் முருகன் ஏந்திய உடம்பிடியாகிய வேலைத் தெய்வமாகக் காட்டியுள்ளார்.

முருகக் கடவுளுக்கு வேல் இன்றியமையாதது. 'வேலை விளங்குகையான்' என்று முருகனைக் கூறுவார் அருணகிரி நாதர். வேலோடு கூடிய முருகனை வணங்கி வழிபடலாமே யன்றி வேலின்றி முருகனை வழிபடலாகாது என்றும் ஆனால் வேலைமட்டும் தனித்து வழிபடலாம் என்றும் ஆன்றோர்

கூறுவர். "செந்திலோன் திருக்கை வேல் என்கிலே" என்பது கந்தரலங்காரம். சிலப்பதிகாரத்தில் 'வேல் கோட்டம்' என ஒன்றை இளோங்கோவடிகள் காட்டுகின்றார்: எனவே உடம் பிடி என்பது பொதுவாக வேல் என்பதாகக் குறிப்பிட் டாலும் சிறப்பாக முருகப் பெருமானது வேலுக்கு மட்டுமே ஆன்றோர்கள் வழிவழியாகத் தனித் தன்மையைச் சுட்டிவரு கின்றனர் என்பது உண்மையாகும்.

சிவபெருமான் முருகனிடம் வேலே ஈந்தபோது. "எப் படைக்கும் நாயக மாவதொரு தனிச்சுடர் வேல்" (விடை பெறுபடலம் 37) என்று கூறியதாகக் கந்தபுராணத்துள் பேசப்பட்டுள்ளது. தாரகன் முன்பாக முருகன் காட்சியளிக் கின்றான், முருகனின் அள்ளிக் கொள்ளும் பேரழகினைத் தார கன் தன் தவப்பேற்றால் கண்ணாரக் கண்டதாகக் கச்சியப்பர்.

முழுமதியன்ன ஆறுமுகங்களும் மூந்நான்காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுளபடையின் சீரும்
அழகிய கரமீராறும் அணிமணி தண்டையார்க்கும்
செழுமலரடியுங் கண்டான் அவன்தவஞ் செப்பற்பாற்றே. (126)

என்றுகூறி வியக்கின்றார். முருகனது படைகளுள் வேலும் ஒன்று, ஆனால் இப்பாட்டில் வேலும் வேறுளபடையின் சீரும் என்று பிரித்து எண்ணப்பட்டிருப்பதால் வேலின் தனித்தன்மை நன்கு விளங்குகின்றதன்றோ!

தாரகனேச் செற்ற அத்தனிவேல் சூரபன்மனேயும் கொல் லப் புறப்பட்டு வருகின்றது. இங்குக் கச்சியப்பர் வேலேப் பல படியாகக் கூறுகின்றார். 'நாயகன் தனது தெய்வப்படைக் கலம் நடந்தன்றே' (481) என்றும் தெய்வச் செவ்வேல் (482) கடவுட்செவ்வேல் (483) என்றும் வேலேக் கூறிக் கொண்டே வந்து இறுதியில் வேலேத் தெய்வமாக்குகின்றார். இதுவரை வேலுக்கு அடைமொழிகளேக் கொடுத்தும்கொடுக் காமலும் கூறிவந்த ஆசிரியர், இறுதியில் சூரபன்மனேத் தடிந்த நிலேயைப் பேசும் போதுமட்டும் வேலேத் தெய்வ மாக்கி வேலின் தனித்தன்மையை விளக்கினர்.

விடம்பிடித் தமலன்செங்கண் வெங்கனல் உறுத்திப்பாணி
இடம்பிடித் திட்டதீயில் தோய்த்துமுன் இயற்றியன்ன

உடம்பிடித் தெய்வம் இவ்வாறுருகெழு செலவின்ஏகி
மடம்பிடித் திட்டவெஞ்சூர் மாமுதல்தடிந்த தன்றே. (487)

முருகனிடம் உள்ள எல்லாப் படைகளும் தெய்வத் தன்மை பொருந்தியவைகளே, முருகன் சிங்கமுகனெடு போர்புரியுங் காலத்து சிங்கமுகன் முருகனைப் பார்த்து வேல் ஒன்றைத் தவிர வேறு படைப்பயிற்சி உனக்கு இல்லையோ என்றுகூற, முருகன்.

"கஞ்சம தனைய வோர்கைக் காமருகுலிசந் தன்னை
வஞ்சகன் உயிருண்டொல்லை வருகென விடுத்தான்" (253)

என்று குலிசப்படையின் தெய்வத் தன்மையைக் கச்சியப்பர் விளக்கினுர். எனவே வேல், குலிசம் முதலிய அனைத்துப் படைகளும் தெய்வத் தன்மையுடையனவாயிருப்பினும் வேலே வணக்கத்திற் குரியதாகத் தனித்துப் பேசப்பட்டிருப் பது சிந்தித்தற்குரியதாகும்.

கிரௌஞ்ச மலையாகிய நின்ற தாரகனை, வேல் இருகூருக் கியது போலவே மாமரமாகி நின்ற சூரனை இருகூருகப் பிளந்து, தெய்வத்தன்மை வாய்ந்த வேல், தாரகன் மீதுபட்ட போது தாரகன் அழிந்தான். ஆனுல் சூரன் மீது டட்டபோது சூரன் இறவாமல் உயிர் பிழைத்தான். 'தாரகன் வேலாற் பட்டுப் புடவியில் வீழா நின்ருன்' (189) என்று கூறிய கச்சியப்பர் சூரனைப் பற்றிக் கூறுகையில்,

"ஆடல்வேல் எறிதலோடும் ஆமிரவடிவாய் அண்ட
கூடமும் அலைத்தகள்வன் அரற்றெடு குறைந்து வீழ்ந்தும்
வீடிலன் என்ப மன்னே"

என்று சூரனின் அழியாத் தன்மையை எடுத்துக் கூறினுர். அதாவது சூரபன்மன் மயிலும் சேவலுமாய் வர அவ்வேல் சூரனுக்கு அருளியது போலும். இதனை அருணகிரிநாதர், "ஆடும்பரிவேல் அணிசேவல்" என வேலின் இருகூறு படுத்திய தெய்வத் தன்மையை உணர்த்திக் காட்டினுர். முருகனிடமிருந்து புறப்படும் போது, தெய்வப் படைக்கல மாக, கடவுட் செவ்வேலாக இருந்த வேல்; சூரனை மயிலும் சேவலுமாக்கிச் சூரனுக்கு ஈறிலா நல்வாழ்வைத் தரப்போகி

றது என்பதைக் குறிப்பாகக்காட்டும் முகத்தான் அத்தெய்வச் செவ்வேல் சூரனை நெருங்கியதுமே தெய்வமாக மாறி விட்டது என்பதைக் கச்சியப்பர் நுண்ணிதின் உணர்த்து கின்றார். எனவே வேலை வணங்கினாலேயே அது முருகனை வணங்கியதற்குச் சமமாகும்.

வேலை அறிவுக்கு ஒப்பாகக் காட்டுவர், கூர்மையும் அகலமும் நீட்சியும் உடையது வேல். அது, மடம்பிடித்திட்ட வெஞ்சூரனைத் தடிந்தது. அதுபோல அரம் போலும் கூர்மை யும் சாந்துணையும் கற்றறியும் அகற்சியும் மதிநுட்பம் நூலோ டுடைய ஆழமும் கொண்ட அறிவாகிய, வேலைக் கொண்டு நம்மிடமும் பிறரிடமும் உள்ள அறியாமையாகிய அரக்கனைக் கொல்வதே கந்தபுராணத்தின் இவ்வுடம்பிடித் தெய்வம் காட்டும் வாழ்க்கை விளக்கமாம் என்று கச்சியப்பரின் கருத் தாகக் கருதலாம்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டு ரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 5-00 வெளிநாடு ரூ. 7-00

செயலாளர், "ஞானசம்பந்தம் அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

PANGUNI BARANI POOJA TO SRI SWAMINATHA SWAMI
AT RAMAKRISHNAPURAM - NEW DELHI
CAPITAL Rs 1,500/-

This endowment has been created by ***Sri La Sri Kasivasi MuthuKumaraswami Tambiran Swamigal Avergal the 21st head*** of Sri Kasi Mutt, Tirupanandal to perform Pooja to Sree Swaminathaswami in New Delhi in perpetuity on Barani Nakshatram (Star)day in the Tamil month of Panguni every year. This is the 37th Endowment created by the Donor. This shall be named as ***"Panguni Barani Pooja Endowment to Sri Swaminathaswami At Ramakrishnapuram, New Dalhi'***.

2. The capital of the endowment shall be Rs. 1500/- (Rupees One thousand five hundred only) consisting of Long Term Fixed Deposit fetching interest at 10% per annum for 85 months in the Central Co-operative Bank, Kumbakonam, Tirupanandal Branch F. D. No. 0066 dated 3-7-1974 for Rs. 1500/-. The administration of the fund shall vest in us and our successors in interest.

3. a) The annual interest after deducting the incidental charges for administration of the fund, shall be utilised to perform pooja Sri Swaminatha swami at Ramakrishnapuram, New Delhi on Barani Nakshatram (Star) day in the Tamil month of Panguni every year according to the budget prepared by the Uttara Swami Malai Trust, Sree Swaminatha swami Seva Samaj, Ramakrishnapuram, New Delhi

b) The amount will be sent to the President, Sree Swaminathaswami Seva Samaj New Delhi who will cause to perform Abishegam, Pooja etc. to Lord

Swaminatha and send prasadam to us and our successors in interest.

c) The amount of contribution under this fund may vary according to the interest derived

4. This endowment will not be diverted to any other purpose than the one mentioned above.

5. The capital shall stand in our name and our Successors in interest. The capital will be reinvested from time to time in Government securities or Long Term Fixed Deposits fetching high rate of interest.

Tirupananda
3—7—1974 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

75. திருச்சண்பைநகர் பண்: சாதாரி

எந்தமது சிந்தைபிரி யாதபெரு
மானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபமலி வாய்மை யதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள்
செய்யஅமர் கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பை நகரே.

பொழிப்பு: 'எம்முடைய சிந்தையை விட்டு அகலாத பெருமானே!' என்று தலைவணங்கித் தேவர்கள் வந்து தோத்திரம் செய்யவும், மணம் வளரும் தூபத்தோடு தீபமும் நிறைகின்ற அருச்சனைகளை உண்மையான அன்போடு அந்தியிலும் பொருந்துகின்ற பல சந்தியிலும் செய்யவும் அவற்றை விரும்புகின்ற அழகனாகிய சிவபெருமான் அழகுமிக்க கூந்தலையுடைய நல்ல உமாதேவியோடு தங்கியிருக்கும் இடம் திருச்சண்பை நகரமாகும்.

இறைஞ்சுதல் – தலைதாழ்த்தல்; இமையோர் - கண்ணை இமைக்காத தேவர்; துதி–புகழாகிய தோத்திரம்; தூபம்–நறும்புகை; அந்தி–மாலை; சந்தி–விடியல்: அமர்கின்ற–விரும்புகின்ற; சந்தம்–அழகு: குந்தளம்–கூந்தல்; சண்பைநகர் என்பது சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களில் ஒன்று.ஞானசம்பந்தர் சீர்காழியில் தங்கியிருந்து மூல இலக்கியமாகப் பாடியருளிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தைப் பாடுபவர் சிவலோகம் சேர்வர்.

76. திருமறைக்காடு பண்: சாதாரி

கற்பொலி சுரத்தினெரி கானினிடை
மாநடம தாடிமடவார்
இற்பலி கொளப்புகுதும் எந்தைபெரு
மானதிடம் என்பர்; புவிமேல்

மற்பொலி கலிக்கடல் மலைக்குவ
டெனத்திரை கொழித்த மணியை
விற்பொலி நுதற்கொடி யிடைக்கணிகை
மார்கவரும் வேதவனமே.

பொழிப்பு: உலகில் வளம்மிக்கதும் ஓசையுடையதும் ஆகிய கடலானது தனது அலைகளால் மலைச்சிகரங்களைப் போல அரித்துக் கொண்டு வந்து குவித்த முத்துக்களை விற் போன்ற நெற்றியும் கொடி போன்ற இடையுமுடைய உருத் திரகணிகையர் வாரிக் கொள்கின்ற திருமறைக் காட்டைப்- பருக்கைக் கற்கள் வெப்பத்தால் ஒளிவிடுகின்ற பாலைநிலம் போன்ற நெருப்பெரியும் சுடுகாட்டில் பெருங்கூத்தை ஆடு பவனும், பெண்களின் இல்லந்தோறும் பிச்சை வாங்குவதற் காகப் புகுகின்ற எந்தையும் ஆன சிவபெருமானது இடம் என்று கூறுவர்.

சுரம்-பாலைநிலம்; எரிகான்-சுடுகாடு; நடமதாடி-கூத் தாடியாகிய சிவபெருமான்; புவி-உலகம்; மல்-வளம்; கலி-ஓசை; குவடு-சிகரம்; திரை-அலை, கொழித்த-அரித்தெடுத்த; மணி-முத்து; கடல் அலையால் மலைக்குவடெனக் கொழித்த மணி எனக்கூட்டுக. கணிகையார்-உருத்திர கணிகையர்; இவர்கள் திருக்கோயில்களில் நிருத்தமாடுதல் முதலிய பல் பணிசெய்து வந்த தேவர்அடியார் ஆவர். வேதவனம்-திரு மறைக்காடு; வேதங்கள் பூசித்தலால் இப்பெயர் வந்தது. வேதவனத்தை எந்தை பெருமானது இடம் என்பர் என முடிக்க. ஞானசம்பந்தர் நாவுக்கரசருடன் திருமறைக் காட்டில் தங்கி இருந்தபோது பாடிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தை ஓதுபவர் உயர் வானுலகில் வாழ்வார்கள்.

77. திருமாணிகுழி பண்: சாதாரி

பொன்னியல் பொருப்பரையன் மங்கைஒரு
பங்கர்புனல் தங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறைவிடம்
கன்னிஇள வாளைகுதி கொள்ளஇள
வள்ளைபடர் அள்ளல் வயல்வாய்
மன்னிஇள மேதிகள் படிந்துமனை
சேர்உதவி மாணிகுழியே.

பொழிப்பு: பொன்மயமான மேருமலையரசனின் மகளை ஒரு பக்கத்தில் உடையவரும், கங்கைநீர் தங்கிய சடையின் மேல் வன்னிஇலையோடு ஊமத்த மலரை அணிந்த வலிய சாமர்த்தியமுள்ளவருமான சிவபெருமான் உளம் மகிழ்ந்து தங்கியுள்ள இடமானது மிக இளைய வாளை மீன்கள் துள்ளிக் குதிக்க, இளைய வள்ளைக் கொடிகள் படர்கின்ற சேறுமிக்க வயலில் இளைய எருமைகள் நிலைத்துத் தங்கிக்கிடந்து பின்பு தத்தம் வீடுகட்குச்சென்று சேர்கின்ற உதவித் திருமாணிகுழி என்ற தலமாகும்.

பொன்னியல் பொருப்பு–மேருமலை; விறல்-வலிமை; வித்தகர்–சமர்த்தர்: கன்னி–இளமை: அள்ளல்-சேறு; மேதி-எருமை; படிந்து-தங்கியிருந்து, வித்தகர் உறைவிடம் உதவி மாணிகுழி என முடிக்க. மாணி-பிரமசரரியாக வாமனஅவதாரம் எடுத்த திருமால். இவ்வூர் இறைவனின் பெயர் கல்வெட்டில் உதவி நாதர் என்று குறிக்கப்படுகிறது. எனவே உதவி நாதரை மாணியாகிய வாமணர் வழிபட்ட தலமாகையால் உதவி மாணிகுழி எனப்பெயர் வந்தது. இப்பதிகத்தை இசையோடுபாடுபவர் நெடுவான நிலத்தை உடையவராவார்

78. திருவேதிகுடி பண்: சாதாரி

நீறுவரி ஆடரவொ டாமைமன
வெண்புநிரை பூண்பர்இடபம்
ஏறுவரி யாவரு மிறைஞ்சுகழல்
ஆதியர் இருந்த இடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை
நாறஇணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள
மாரும்வயல் வேதிகுடியே.

பொழிப்பு: குலைவிரிந்த பாக்கு மரமும் நிறைந்த வாழை மரமும் மணம் வீச, ஆணும் பெண்ணுமான இணை வாளை மீன்கள் மடுக்களில் தனியாகப் பிரியாமல் விளையாட வளம் நிறைந்த வயல்களையுடைய திருவேதிகுடி என்ற தலம்-திருநீற்றையும் வரியுள்ள ஆடுகின்ற பாம்போடு ஆமை ஓட்டையும் கோழிகளையும் எலும்பு மாலையையும் அணிபவரும்

விடையில் ஏறுபவரும் யாவராலும் வணங்கப் பெறும் திரு வடிகளையுடைய முதல்வரும் ஆகிய சிவபெருமான் இருந்த இடமாகும்.

வரி-கோடு; அரவு-பாம்பு; மனவு-சோழிக்காய்; என்பு நிரை-எலும்புமாலை; இடபம்-விடை; தாறு-குலை; பூகம்-பாக்குமரம்: விரை-மணம்; வேதிகுடி ஆதியர் இருந்தஇடமாம் என முடிக்க. வேதங்களை ஓதியருளிய இறைவன் தங்கியுள்ள இடமானதால் வேதிகுடி எனப்பெயர் பெற்றது. இப்பதிகத்தை ஓதுபவர்கள் நல்லவர்களாக வாழ்ந்து இமையோர் உலகம் எய்தி அரசாளுவது உறுதியாகும் ஆணை நமதே என்று ஆணையிட்டுப் பயன் கூறிய பதிகங்களில் இதுவும் ஒன்று.

———

(தொடரும்)

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

		ரூ.	பை
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3	50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0	40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0	20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0	40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0	60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2	70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0	50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1	00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1	00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	50
12	,, மூலம் ...	0	10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0	15
14	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0	10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0	05
16	அபிராமியந்தாதி மூலம் ...	0	15
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	4	25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2	75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	1	75
20	திருவாசகம் (மூலம்) ...	0	70
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	3	50
22	9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0	56
23	,, தெளிவுரை ..	1	50
24	பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ...	6	75
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) —	2	50
26	பேராயிரப் பனுவல்கள் ...	0	10
27	திருத்தொண்டர் புராணசாரம் ...	0	40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0	25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0	50
30	திருக்கயிலைத் திருமுறை ...	0	37
31	பழமொழித் திருமுறை ...	0	25
32	அப்பர்விழா வெளியீடு ...	0	25
33	Hymns and Proverbs ...	0	35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள் —	0	10

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.
Regd No. M. 5574

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	...	0 30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
37	திருவாசகம் தேனும் கனியும்	...	0 15
38	தேவாரம் பாடும்பயன்	—	0 15
39	காசிக்கலம்பகம் உரை நடை	...	0 15
40	தாழைத் திருமுறை	..	0 15
41	ஐந்து நீதி நூல்கள்	..	0 10
42	நவக்கிரகமாண்பு	..	0 25
43	ஸ்ரீ சைலம்	...	0 10
44	திருவுசாத்தனக் கல்லெழுத்துகள்	...	0 37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி	...	0 10
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம பதிப்பு)	...	2 00
48	திருமுருகாற்றுப்படை	..	0 15
49	தேவார வைப்புத்தல விளக்கம்	...	0 15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும சோந்தது)	...	2 00
51	திருக்குறள் மூலம்	...	0 25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிறவுரை	..	0 20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின விளக்கம்	..	0 13
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	..	0 60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	..	1 50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	..	2 50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,,	..	1 00
	ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புததகமும்	...	4 00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன்	...	1 25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன	..	1 00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு)	...	0 50
62	மங்கலம்	..	0 20
63	திரு ஆனைத் திருமுறையும உருததிராக்க விதானமும	..	0 20
64	கோதனத் திருமுறை	..	0 10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன	...	0 15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை	...	0 15
67	மகேசுவரபூசை	...	0 15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர்	...	0 10
69	திருவிசைப்பா தேனும் கனியும்	...	0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1 **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**

2. **"தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74